வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு வார மலர் Eelanadu


Email : news@eelanadu.lk மலர் : 06 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 313 பக்கங்கள் : 16

## மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும்!

### ஜனநாயகப் போராளிகள் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 09 நல்லதொரு புரிந்துணர்வு இனங்களுக்கிடையில் ஏற்பட வேண்டுமாகவிருந்தால் நிச்சயமாக மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவம் அகன்று செல்லவேண்டும் 15

# எல்லை நிர்ணயத்தின் பின்னரே மாகாண சபைகளுக்கு தேர்தல்!



### புதிய அரசமைப்பில் மாகாண சபை முறை இருக்காது என்கின்றார் ரில்வின் சில்வா

கொழும்பு, நவ. 09 புதிய அரசியலமைப்புக் கொண்டுவரப்படும்போது மாகாண சபை முறைமை நீக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

புதிய எல்லை நிர்ணயம் செய்யவேண்டியிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, அது கொண்டு வரப்பட்டு, மக்களின் அங்கீகாரம் பெறப்பட்ட பிறகே மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டான் தமிழ் ஒளியில் ஒளிபரப்பாகும் அரசியல் நிகழ்ச்சியான 'நேர்கொண்ட பார்வை' நிகழ்ச்சியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் கொள்கைப் பிரகடனத்தில், மாகாண சபைகள் எங்கள் நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் வெற்றியடையவில்லை என்பதை நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

ஆனால் இப்போது மாகாண சபைகள் உள்ளன. எனவே, தற்போதுள்ள 15

## பட்ஜெட் வாசிப்பு வேளையில் சஜித் உறக்கத்தில் இருந்தாரா?

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கேள்வி

கொழும்பு, நவ. 09 வரவு-செலவுத் திட்ட வாசிப்பின்போது பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுனா மாத்திரமல்ல, எதிர்க்கட்சித் தலைவரும் உறங்கிக்கொண்டு இருந்துள்ளாரா என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒதுக்கீட்டுச் சட்டமூலம் - 2026 - இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் 15

## இந்தியாவின் பெரும் குற்ற கும்பல் விடுதலைப் புலிகளுடன் கூட்டணி!

### உளவு பிரிவு கடும் எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 09 இந்தியாவில் இயங்கும் தாவூத் இப்ராஹிம் குற்றக்கும் பல் (டி-சிண்டிகேட்) மற்றும் விடுதலைப் புலிகளின் எஞ்சிய பிரிவினருக்கும் இடையே உருவாகி வரும் புதிய, அபாயகர மான கூட்டணியைக் குறித்து இந்திய புலனாய்வு அமைப் புகள் தீவிர எச்சரிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வட இந்தியாவில் காவல்துறை நடவடிக்கைகளால் பெரும் இழப்பைச் சந்தித்த டி-சிண்டிகேட்,தற்போது தமது போதைப் பொருள் வர்த்தகத்தை விரிவுபடுத்த தென்னிந்தியா மற்றும் இலங்கையை 15

## மதுபானச்சாலை அனுமதி பெற்றிருந்தால் என் மீது உடன் சட்ட நடவடிக்கை எடுங்கள்!

### சபையில் நேற்று சவால் விடுத்தார் சிறீதரன்

கொழும்பு, நவ. 09 எனது பெயரிலோ, எனது சிபாரிசிலோ கடந்த காலங்களில் மதுபானச்சாலைக ளுக்கான அனுமதிப் பத்திரங்கள் ஏதும் பெற்றிருந்தால் உடன் வெளிப்படுத்தி என் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேற்று சபையில் தெரிவித்தார்.

உண்மைக்கும் அறத்துக்கும் மாறான வகையில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்கவினால் தமக்கு எதிராக 15

## கொட்டாஞ்சேனை துப்பாக்கி சூடு: மூவர் நேற்று மானிப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், நவ. 09 கொழும்பு கொட்டாஞ்சேனையின் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுள சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனை 16 ஆவது ஒழுங்கையில் நேற்று முன் தினம் காரில் வந்த சிலரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 30 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.


இது தொடர்பிலான 15

## நுகேகொடை பேரணியில் விமல் தரப்பு பங்கேற்காது

கொழும்பு, நவ. 09 நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெற உள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் பேரணியில் தேசிய சுதந்திர முன்னணி பங்கேற்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## பொருளாதார ஒழுக்கத்தை கொண்டுள்ள பட்ஜெட் இது!

### இலங்கை வர்த்தக சபை தலைவர்




கொழும்பு, நவ. 09 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், முன்னெப்போதும் இல்லாத பொருளாதார ஒழுக்கத்தைக் கொண்டுள்ளதாக இலங்கை வர்த்தக சபையின் தலைவர் கிரிஷான் பாலேந்திரா தெரிவித்துள்ளார்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தால் புதிய 15

## வடமாகாண சபை தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி வெல்லும்!

### ஜெகதீஸ்வரன் எம்.பி. கூறுகிறார்



வவுனியா, நவ. 09 கடந்த இரு தேர்தல்களைப் போல் வரவிருக்கும் வட மாகாண சபை தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி மக்களுடைய ஆதரவைப் பெறும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார். 15

## ஏமாற்று பட்ஜெட் இது!

### பொதுஜன பெரமுன விமர்சனம்

கொழும்பு, நவ. 09 ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட 2026 ஆம் நிதியாண்டுக்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தை பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.

"மக்களை ஏமாற்றும் விதத்திலேயே வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப் பட்டுள்ளது." என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் 15

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பெண் தலைவர்களை வலுப்படுத்த வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 09



தலைமைத்துவங்களுக்கிடையிலான தொடர்புகளை உருவாக்குவதன் முதற்படியாக 'இணைக்கும் குரல்கள்' பெண் தலைவர்களுக்கான பிராந்திய பரிமாற்ற நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள், கல்வி மற்றும் வணிகத் துறைகளிலிருந்தான தேசிய மற்றும் மாவட்ட ரீதியிலுள்ள பெண் தலைவர்களை ஒன்றாக இணைக்கும் நிகழ்வாக இது அமைந்தது .

இங்கு அனுபவங்கள், தடைகள் மற்றும் பெண் தலைமைத்துவத்தைப் பலப்படுத்துவதற்கு அடையாளம் காணப்பட்ட நடைமுறைத் தீர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவரும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ், ஒன்றியத்தின் உறுப்பினர்களான ஹேமாலி வீரசேகர, ஹசாரா லியனகே, துஷாரி ஜயசிங்க, அனுஷ்கா திலகரத்ன, எம்.ஏ.சி.எஸ்.சதுரி கங்கானி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பாராளுமன்றம் மற்றும் ஊடகத்துறை நிபுணர் சதுரங்க ஹப்புஆராச்சி ஆகியோர் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

நிலையான வழிகாட்டுதல் வலையமைப்பை உருவாக்குவதற்கும், வடக்கில் உள்ள பெண் தலைமைத்துவங்களிடமிருந்து முக்கிய விடயங்கள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்று அவற்றை உள்ளடக்கிய அறிக்கையை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டை இந்தத் தளம் உருவாக்கியது.

தலைமைத்துவத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்வதற்கும், இலங்கை முழுவதும் உள்ளடக்கிய நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் ஆதார அடிப்படையிலான கொள்கை முடிவுகளை முன்னெடுப்பதில் பெண் பாராளுமன்ற உறுப்பி னர்கள் ஒன்றியத்துக்கு இந்த அறிக்கை உறுதுணையாக இருக்கும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(எ)

# இளைஞர் பரிமாற்ற நல்லிணக்க வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ. 09

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் மாவட்ட இளைஞர் சம்மேளனமும் இணைந்து நடத்திய இளைஞர் பரிமாற்ற நல்லிணக்க வேலைத் திட்டத்தின் ஆரம்ப மற்றும் அறிமுக நிகழ்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி சிறிமேனன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னராக குருநாகல், கொழும்பு, அம்பாந்தோட்டை, கேகாலை ,மொனராகலை ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த 160 இளைஞர், யுவதிகள் பழைய பூங்காவிலிருந்து மாவட்டச் செயலகத்துக்கு சம்பிரதாய முறைப்படி அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் கே.டி.சி. ஹாமினி,யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் திருமதி யு. சிவகாமி, யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளருமான எஸ். கபிலன், வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் ரி. திருச்செந்தூரன் ஆகியோர் பங்குபற்றினர்.

மேலும், ஐந்து மாவட்டங்களிலிருந்தும் வருகைதந்த இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர், யுவதிகளின் வீடுகளில் தங்கியிருப்பார்கள். அந்த வகையில், குருநாகலிருந்து வருகை தந்த இளைஞர், யுவதிகள் ஊர்காவற்றுறைக்கும், கொழும்பிலிருந்து வருகை தந்தவர்கள் நெடுந்தீவுக்கும், அம்பாந்தோட்டையிலிருந்து வருகை தந்தவர்கள் வேலணைக்கும், கேகாலையிலிருந்து வருகை தந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கும், மொனராகலையிலிருந்து வருகை தந்தவர்கள் காரைநகருக்கும் சென்று அவர்களுடன் இணைந்து பழகுவதனூடாக நல்லிணக்கம், சக வாழ்வு என்பனவற்றை மேம்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்காகும்.

(எ-03)

# ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 09

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாணக் கற்கை நிலையம் நடத்தும் ஆவணக் காப்பக அறிமுக நிகழ்வு யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணி முதல் இரவு 07.30 மணி வரை நடைபெறவுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மைய நிறைவேற்றுப் பணிப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கே.எஸ். இரத்தினவேல், பொறுப்புக்கூறலும் சுயாதீன வழக்குத் தொடுநர் தொடர்பிலான விவாதமும் எனும் தலைப்பில் சிறப்புக் கருத்துரையை வழங்குவார்.

தற்போதைய சூழலில் அரசியலமைப்பாக்கச் செயன்முறையில் தமிழர் அணுகுமுறை எவ்வாறு இருத்தல் வேண்டும்? எனும் தலைப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன்,

தமிழீழ மக்கள் விடு தலைக் கழகத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தருமலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர்.

(எ)

# ஹெரோயின் நுகர்ந்த 3 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த மூன்று பேர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது போதைப்பொருளை நுகர்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஊசி, ஹெரோயின் உள்ளிட்ட சில பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் போதை தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள கருணாரத்ன தலைமையிலான குழுவினரின் ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, நல்லூர் பகுதியைச் சேர்ந்த 30 வயது இளைஞரும் அரியாலை பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 32 வயது இரண்டு இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் கைதான சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(எ-03)

# கட்டைக்காட்டில் கசிப்பு முற்றுகை சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், நவ. 09

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் சட்டவிரோத செயல்பாடுகளை தமது பகுதியில் முற்றாக அழித்தொழிப்பது என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது இதன் ஒரு பகுதியாக நேற்றுக் காலை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கசிப்பு அருந்த பலர் கூடியிருந்த காட்டுப்பகுதி திடீரென முற்றுகையிடப்பட்டது.

இந்த முற்றுகையின் போது கசிப்பு பரலை கைவிட்டு விட்டு அங்கு கூடியிருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன் கசிப்பு பரல் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தினரால் கைப்பற்றப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது

இந்த நடவடிக்கை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக தலைவரும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினருமான பி. அலஸ்ரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது

தமது எல்லைக்குள் இடம் பெறும் சட்டவிரோத செயல்பாடுகளை உடன் நிறுத்துமாறும் மீறினால் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைப்போமென சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(எ)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு சீல் வைக்கப்பட்டது

முல்லைத்தீவு, நவ. 09

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறி இயங்கிய ஓர் உணவகம் திடீர் சோதனையின் போது கண்டறியப்பட்டதையடுத்து அதி காரிகளால் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டது. அத்தோடு, உரிமையாளருக்கு 50,000 ரூபாய் அபராதமும் விதிக் கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட விசுவமடு பகுதியில் கடந்த 05 ஆம் திகதி திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. உடையார்கட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் பொதுச் சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் இணைந்து குறித்த உணவகத்தை பரிசோதித்தனர்.

சோதனையின் போது மருத்துவ சான்றிதழ் இல்லாமை, உணவக அனுமதிப் பத்திரம் இன்மை, தொழிலாளர்கள் முகச்சவரம் செய்யாமை, தண்ணீர் பகுப்பாய்வு சான்றிதழ் இன்மை, கழிவு தொட்டி இல்லாமை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடு கள் காணப்பட்டன. மேலும், வெற்றிலை மென்றவாறு உணவு பரிமாறல் போன்ற கடுமையான சுகாதார மீறல்களும் பதிவாகியிருந்தன.

இந்த நிலையில், குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக உடையார்கட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் பொதுச் சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணையின் போது, உணவக உரிமையாளரை குற்றவாளியாக இனங் கண்டு, உணவகத்தை சுகாதார சீர்கேடுகள் நிவர்த்தி செய்யும் வரை மூடுமாறு உத்தரவிட்டதுடன், உரிமையாளருக்கு 50,000 ரூபாய் அபராதம் விதித்ததுடன் எதிர்காலத்தில் இதுபோன்ற மீறல்கள் இடம் பெறாதவாறு கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளை நிர்மாணிக்க நிதியுதவி

கொழும்பு, நவ. 09

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள 20 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட முன் மொழிவு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்டில் மலையகத்துக்கான 2 திட்டங்கள் வரவேற்கத்தக்கன

## செந்தில் தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தில் மலையகத்துக்கான இரு திட்டங்களும் வரவேற்கத்தக்கன என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் 2025 ஆம் ஆண்டுக்கு சமர்ப்பித்த வரவு- செலவு திட்டத்தில், மலையகத்துக்கு இந்திய அரசாங்கத்தின் வீடமைப்பு திட்டத்தை தவிர புதிதாக வேறு எந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால், ஜனாதிபதியின் 2026 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது வரவு- செலவு திட்டத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த கொடுப்பனவாக 200 ரூபாய் அரசாங்கம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், நுவரெலியாவில் ஐ.ரி.பார்க் உருவாக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு திட்டங்களும் அமுல்படுத்தப்படும் நிலையில் மக்களின் வாழ்வாதாரம் உயர்வதோடு, மலையகப் பகுதியில் ஐ.ரி. துறை வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இதன் மூலம் தொழில் துறை வளர்ச்சி அடையும். எனவே, ஜனாதிபதியின் இந்த இரு திட்டங்களும் வரவேற்கத்தக்கன- என்றார். (எ)

# ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களின் பிரச்னைகளை தீர்க்க ஒத்துழைப்பு

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, நவ. 09

பி. சி. பெரேரா சம்பள ஆணைக்குழு மூலம் செயல்படுத்தப்பட்ட சம்பள அதிகரிப்பு முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கிடைக்காமையால் சுமார் 85,000 ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் 40,000 ரூபாய் ஓய்வூதியம் பெறும் வேளை மற்றும் சிலர் சுமார் 120,000 ரூபாய் ஓய்வூதியம் பெறுகின்றனர். இந்த பாரதூரமான அநீதிக்கு எதிராக தானும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் எடுக்க முடியுமான உச்சபட்ச நடவடிக்கை களை எடுத்து, நீதியை நிலைநாட்டுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தேசிய அமைப்பு நேற்று முன்தினம் தியத்த பொல்துவ சந்தியில் மேற்கொண்ட ஆர்ப்பாட்ட இடத்துக்குச் சென்ற போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் தலைமை தாங்குவோம். இது தொடர்பான முன்மொழிவுகளை இந்த இம்முறை வரவு- செலவுத்திட்ட விவாதத்திலும், குழு நிலை விவாதத்தின் போதும் முன்வைப்பேன். தேவைப்பட்டால் இலவச சட்ட உதவிகளை யும் பெற்றுத் தருவேன் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (எ)

# விசேட சுற்றிவளைப்பில் மேலும் 740 பேர் கைது

கொழும்பு, நவ. 09

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 31, 436 பேர் சோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் 740 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 16 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பிடியாணைகளுக்கமைய 322 பேரும் திறந்த பிடியாணைகளுக்கமைய 200 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 16 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 25 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 869 பேர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

# பெருந்தொகை பீடி இலைகளுடன் துங்கல்பிட்டியவில் ஒருவர் கைது



கம்பஹா, நவ. 09

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பீடி இலைகள் மற்றும் ஒரு லொறியுடன் சந்தேகநபர் ஒருவர், துங்கல்பிட்டியவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

துங்கல்பிட்டிய - கபுங்கொட பகுதியில், மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 1943 கிலோகிராம் பீடி இலைகள் அடங்கிய பொதிகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு - பிட்டிபன பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது.

துங்கல்பிட்டிய பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# போதை வர்த்தகத்திலிருந்து விலகுமாறு தன் கட்சியினரை அறிவுறுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் நாமல் எம். பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 09

போதைப்பொருளுக்கு எதிராக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முதலில் தனது கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை போதைப்பொருள் வர்த்தகத்தில் இருந்து விலகுமாறு அறிவுறுத்துவது அவசியம். அண்மையில் போதைப்பொருள் உள்ளதா? என மாணவர்களின் பைகளை சோதனையிட்டனர். அதற்கு பதிலாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் பைகளை சோதனை செய்திருக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி முதற்கொண்டு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் உள்ள அனைவரும் பேச்சு திறமை உடையவர்கள் என்பது எமக்கு நன்றாக தெரியும்.

பேச்சு திறமையை போல அவர்களின் செயலும் இருக்கும் என கடந்த வரவு- செலவு திட்டத்தின் போதே எதிர்பார்த்தோம். எனினும், அவர்களின் செயல் திறனை இதுவரை காணவில்லை.

இம்முறை வரவு- செலவு திட்ட உரையின் போது எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஜனாதிபதி உரையாற்றலாம். வரவு - செலவு திட்ட உரையினூடாக வழங்கப்படும் வாக்குறுதிகள், பொதுமக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை.

திருடர்கள் என எம்மீது குற்றம் சுமத்திய தேசிய மக்கள் சக்தி தற்போது வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்கிறது. வெங்காய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்து வெளிநாட்டில் இருந்து அவற்றை கொள்வனவு செய்வதுடன் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை அநாதையாக்கி அவற்றையும் இறக்குமதி செய்கின்றனர்.

போதாத குறைக்கு மீன்பிடி நடவடிக்கையையும் பாதிக்கும்படி மீன்களையும் இறக்குமதி செய்கின்றனர். புலனாய்வு தகவலின் படி போதைப்பொருள் அடங்கிய 323 கொள்கலன்களை சுங்கத்திலிருந்து வெளியே கொண்டு செல்லவும் அனுமதித்துள்ளனர்.

இந்த அரசாங்கம் திருடர்கள் என பழி சுமத்தி விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்துள்ளது. போதைப் பொருள் கடத்தல் பின்னணியிலும் இவ்வாறே தெரிவித்தனர்.

ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள், நாமலின் ஆதரவாளர்கள் என கூறினார்கள் இறுதியில் கைது செய்யப்பட்டவர்கள் திசைகாட்டியை சேர்ந்தவர்களே.

எனினும், இந்த போதைப் பொருள் வர்த்தகத்தில் பாடசாலை அதிபர் ஒருவருக்கு தொடர்புள்ளமையே பெரும் பிரச்னையாக உள்ளது. நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது.

போதைக்கு அடிமையான நபர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களின் சிந்தனையிலிருந்து இவ்வாறான எண்ணங்களை அகற்றுவதற்கான எந்தவொரு திட்டத்தையும் அரசாங்கம் கொண்டு வரவில்லை.- என்றார். (எ)

# பெருமளவிலான ஹெரோயினுடன் மூன்று பேர் கைது

காலி, நவ. 09

காலி - சீனிகம பகுதியில் பெருமளவிலான ஹெரோயின் போதைப்பொருளுடன் மூன்று சந்தேக நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 3 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை தேர்தல் தாமதம்: நழுவல் போக்கில் ஜனாதிபதி

## ரவூப் ஹக்கீம் எம். பி. சாடல்

கொழும்பு, நவ. 09

மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதற்கான நழுவல் போக்கினையே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னெடுக்கிறார். மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,2026 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்னைகளுக்கு எவ்வித தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

கடந்த அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளையே இந்த அரசாங்கம் கடைப்பிடிக்கிறது. பெரியதொரு மாற்றம் ஏதும் இல்லை.

மாகாண சபைத் தேர்தல் பற்றி ஜனாதிபதி பல விடயங்களை குறிப்பிட்டார். மாகாண சபைத் தேர்தல் விடயத்தில் ஜனாதிபதி நழுவல் போக்கினையே கடைப்பிடிக்கிறார்.

மாகாண சபைத் தேர்தல் விடயத்தில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம்.

தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாகவுள்ளோம்- என்றார். (எ)

# பெரும்பாலான பிரதேசங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, நவ. 09

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகல் 01.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா, தென், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (எ)

# ஓட்டோ விபத்தில் சிக்கிய 3 இளைஞர்கள் படுகாயம்

மட்டக்களப்பு, நவ. 09

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஓட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த மாங்காட்டைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில், மட்டக்களப்பு பகுதியிலிருந்து மாங்காடு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோவே இவ்வாறு விபத்தில் சிக்கியது.

இதில், காயமடைந்த 3 பேரும் செட்டிப்பாளையம் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக காக களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனைக்கு மாற்றப் பட்டுள்ளனர். (எ)

# ரயில் கடவை காப்பாளர் கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, நவ. 09

பாதுகாப்பற்ற ரயில் கடவைக் காப்பாளர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது 8 மணிநேரம் கடமை நேரத்துக்கு வழங்கப் படும் 7,500 ரூபாய் மாதாந்த குறைந்தபட்ச கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாயாக அதிகரித்து வழங்குவதற்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனா திபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். (எ)

# கேபிள் கார் திட்டம்: பிரதேச செயலருக்கு எதிராக ரிட் கட்டளை

கொழும்பு, நவ. 09

இலங்கையின் முதல் கேபிள் கார் திட்டத்தின் நடவடிக் கைகளில் அநாவசியமாக தலையிடுவதையோ அல்லது இடையூறு செய்வதையோ தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் கம்பளை பிரதேச செயலாளருக்கு எதிராக ரிட் கட்டளை ஒன்றை பிறப்பித்தது.

இதற்கு மேலதிகமாக, கம்பளை பிரதேச செயலாளர் ஓர் இலட்சம் ரூபாய் நீதிமன்றச் செலவை மனுதாரருக்குச் செலுத்த வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் இராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஆம்பர் அட்வென்ச்சர் என்ற தனியார் நிறுவனம் தாக்கல் செய்த ரிட் மனுவின் தீர்ப்பை வழங்கிய போதே, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தார். (எ)

# அதிபர் கொடுப்பனவை அதிகரிக்க யோசனை

கொழும்பு, நவ. 09

கல்வி இலக்குகளை அடைவதில் அதிபர்களின் நிர்வாகப் பொறுப்புகள் மற்றும் பொறுப்புக்கூறலை அங்கீகரிக்கும் வகையில், அதிபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை 1,500 ரூபாயால் அதிகரிக்கவும் கல்வி இலக்குகளை அடைவதை அதிகரிப்பதற்காக 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கஷ்டப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 20 ஆண்டுகளாக அதிகரிக்கப்படாதிருப்பதனால், அத்தகைய ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் கொடுப்பனவை 1,500 ரூபாயால் அதிகரிப்பதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியங்கள் 2019 ஆம் ஆண்டின் சம்பள கட்டமைப்பின் அடிப்படையில் திருத்தப்பட்ட ஓய்வூதியத்தை 2026 ஜூலை மாதம் முதல் செலுத்துவதற்கு 20,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (எ)

# மக்களின் நலன் கருதி எடுக்கும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு

## ஹர்ஷ டி சில்வா எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

பொருளாதார மீட்சிக்கான பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சொந்தமானது. நாட்டு மக்களின் நலன் கருதி அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அனைத்தையும் எதிர்க்கும் மனநிலையில் நாங்கள் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2026 நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்ட உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்த பெருமை முன்னாள் ஜனாதிபதி உட்பட அந்த அரசாங்கத்துக்கே சேரும். அவர்களின் உழைப்பை இந்த அரசாங்கம் தமக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுக் கொண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு விட்டதாக குறிப்பிடுகிறது.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் சிறந்த திட்டங்கள் ஏதும் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. மாறாக பல போலியான வாக்குறுதிகள் மாத்திரமே இம்முறையும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, வரவு- செலவுத் திட்டம் பற்றி பெரிதாக குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை.

அரச நிர்வாகம் டிஜிற்றல் மயப்படுத்தல், நிகழ்நிலை கொடுக்கல் வாங்கல் முறைமை பற்றிய முன்மொழிவுகள் வரவேற்கத்தக்கவை. புதிய மாற்றத்தை நோக்கிச் செல்ல வேண்டும். அப்போது தான் டிஜிற்றல் பொருளாதார பயனை பெற்றுக்கொள்ள முடியும்- என்றார். (எ)

# துப்பாக்கிச்சூடு காயமடைந்தவர் உயிரிழந்தார்!

கொழும்பு, நவ. 09

கொழும்பு, கொட்டாஞ்சேனை 16ஆம் ஒழுங்கையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

சொகுசு காரில் வந்த குழுவொன்று குறித்த நபரை துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தியதாக ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பழனி ரெமோஷன் தரப்புக்கும் கண்ணா தரப்புக்கும் இடையிலான மோதலின் தொடர்ச்சியாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் எனவும் சம்பவத்தில் பிஸ்டல் வகை துப்பாக்கி பயன்படுத் தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர்.(எ)

# தாதியர் ஆசிரியர்களை உடனே ஆட்சேர்ப்பு செய்ய அறிவுறுத்தல்!

கொழும்பு, நவ. 09

தாதியர் கல்லூரிகளில் தாதியர் ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக, ஆட்சேர்ப்பை துரிதப்படுத்துமாறு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தாதியர் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட தாதியர் ஆசிரியர்களின் எண்ணிக்கை 395 ஆகும்.

எனினும் தற்போது சுமார் 220 பேர் மட்டுமே உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதன்படி, மேலும் 175 தாதியர் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில், தாதியர் கல்லூரி அதிபர்களின் சங்க உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன.

அதன்படி, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாதியர் ஆசிரியர் ஆட்சேர்ப்பை உடனடியாக ஆரம்பித்து, விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சைகளை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நடத்தி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (அ)

# பசியால் வாடும் நோயாளிகள்

கொழும்பு, நவ. 09

கேகாலை மாவட்டத்தில் உள்ள மகாபல்லேகம அரச மருத்துவமனையில் உள்ள நோயாளிகள், போதிய உணவு இல்லாமல் தவிப்பதாக மருத்துவமனை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மருத்துவமனையில் உணவு ஒப்பந்தத்தில் ஏற்பட்ட பிரச்னைகளால், கடந்த 4 ஆம் திகதி முதல் உள்நோயாளிகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் உணவு இல்லாமல் தவித்து வருகின்றனர்.

இந்த உணவு ஒப்பந்தம் போன்ற இதர சேவைகளை வைத்தியசாலை கூட்டுறவுச் சங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாக மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.11.2025 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுமா?

புதிய வரவு - செலவுத்திட்டத்தில் மாகாண சபைத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் எவ்வித தடையும் இல்லை என்னும் பார்வையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது ஆனால் ஜே.வி.பியின் நகர்வுகளை நோக்கினால் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுமா என்னும் கேள்வியை தாண்டிச் செல்ல முடியவில்லை. ஜே.வி.பியின் பொதுச் செயலாளரின் கருத்துக்கள் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்படுமா என்னும் சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துவதகாவே இருக்கின்றது.

எங்கள் கொள்கைப் பிரகடனத்தில், மாகாண சபைகள் எங்கள் நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் வெற்றியடையவில்லை என்பதை நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். ஆனால் இப்போது மாகாண சபைகள் உள்ளன. எனவே, தற்போதுள்ள மாகாண சபைகளுடன் நாங்கள் இணைந்து செயல்படப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கும் ரில்வின் சில்வா, புதிய அரசியல் யாப்பு கொண்டுவரப்படும் போது மாகாண சபை முறைமை இல்லாதொழிக்கப்படும் ஏனெனில் அது இலங்கையில் வெற்றியளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு என்ன என்பதற்கு உறுதியான பதிலை வழங்காது, அனைத்து மக்களுடனும் கலந்துரையாடி, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு, விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்ட விடயங்களுக்கும் தற்போது ரில்வின் சில்வா குறிப்பிடும் விடயங்களுக்கும் இடையில் அதிக வேறுபாடுகள் உண்டு. ரணில் - மைத்திரி காலத்தில் முன்மொழியப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியல் யாப்பு விவகாரம் அணுகப்படும் என்று அநுரகுமார குறிப்பிட்டிருந்தார். ஆனால் ரில்வின் சில்வாவின் கருத்துக்களை உற்றுநோக்கினால் அனைத்தும் ஆரம்பத்திலிருந்து முன்னெடுக்கப்படும் என்றே புரிந்து கொள்ள வேண்டும் - அதாவது, கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு புதியதொரு அரசியல் யாப்பிற்கான நிபுணர் குழுவை நியமித்து, விடயங்களை முன்கொண்டு செல்ல முற்பட்டாரோ, அவ்வாறானதொரு அணுகுமுறை ஜே.வி.பியின் தலைமையில் மீண்டும் புதிதாக முன்னெடுக்கப்படும் என்பதே ரில்வினின் கருத்தாக இருக்கின்றது. அவ்வாறுதான் விடயங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

இதன் மூலம் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தேசிய மக்கள் சக்திக்குள் இரு வேறு பார்வைகள் இருப்பது தெளிவாகின்றது. இதில் எவரது பார்வை மேலாதிக்கம் பெறுகின்றதோ அதுவே இறுதியில் நடைமுறைக்கு வரும். அதே வேளை, மாகாண சபைத் தேர்தலை முன்னெடுப்பதில் சட்டச் சிக்கல் இருப்பதாகவும் ரில்வின் கூறுகின்றார். ஆனால் அவ்வாறான சட்டச் சிக்கலை தீர்ப்பதற்கு இலகுவான வழியுண்டு. ஏன்கனவே பாராளுமன்றத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணையின் அடிப்படையில் விடயங்களை முன்னெடுக்கலாம். அவ்வாறு முன்னெடுத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலுள்ள சட்டச் சிக்கலை போக்க முடியும். ஆனால் சட்டச்சிக்கலை ஒரு பிரதான விடயமாக காண்பிப்பதன் நோக்கம் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கின்றது. இதற்கிடையில் ரில்வின் சில்வா விரைவில் புதுடில்லி செல்லக் கூடுமென்னும் செய்திகளும் வெளிவருகின்றன. மாகாண சபையை தமிழர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை - அவ்வாறான ஒன்றின் மீது இந்தியா ஆர்வம் காண்பிப்பது பொருத்தமானதல்ல என்னும் வாதத்தை ரில்வின் நாசூக்காக முன்வைக்கக் கூடும். அவ்வாறான தொரு வாதத்தை முன்வைத்தால், அதனை எதிர்கொள்வதில் இந்தியாவிற்கும் சிக்கலுண்டு. ஏனெனில் தர்க்க ரீதியில் அது சரியானது ஆனால் மாகாண சபையை நீக்கிவிட்டு புதிதாக கொண்டுவரப்படும் ஒரு விடயத்தில் தமிழ் மக்களுக்கான உச்சபட்ச அதிகாரங்களை உட்புகுத்தக் கூடிய எந்தவொரு வல்லமையும் தமிழர்களிடம் இல்லை. இந்த இடம்தான் மாகாண சபையை பாதுகாக்க வேண்டிய இடமாக இருக்கின்றது.

# நாட்டில் போதைப்பொருள் தடுப்பு 9,267 பேர் ஒரே வாரத்தில் சிக்கினர்!

கொழும்பு, நவ. 09

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கையின் மூலம் ஏழு நாட்களுக்குள் 9,267 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

"ஐக்கிய நாடுகளுக்கான தேசிய பணி"யின் கீழ் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கை, நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் 95 கிலோகிராம் ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர், இதன் விளைவாக ஹெராயின் தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடைய 3,157 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கூடுதலாக, ஐஸ் (மெத்தாம்பேட்டமைன்) கடத்தல் தொடர்பாக 3,252 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர், 262 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்டனர்.

இந்த நடவடிக்கை கஞ்சா விநியோகத்தையும் இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2,320 நபர்கள் கைது செய்யப்பட்டனர் மற்றும் 312 கிலோகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

தடுப்பு உத்தரவின் கீழ் 209 சந்தேக நபர்கள் தற்போது விசாரிக்கப்படுவதாகவும், 104 நபர்கள் மறுவாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(அ)

# பாடசாலைகளில் இனிமேல் போதைப்பொருள் சோதனை!

கொழும்பு, நவ. 09


நாட்டில் போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக்கில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்திட்டத்தின் அடிப்படையில் பாடசாலைகளில் போதைப் பொருள் சோதனைகளை மேற்கொள்ள இலங்கை பொலிஸ் நேரடியாக பங்களிப்பு வழங்கும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து, போதைப்பொருளை ஒழிக்க அனைத்து வழிகளிலும் பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பாடசாலை மட்டத்தில், அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் பல்வேறு போதைப் பொருள் தடுப்பு திட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் சோதனை நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுகளுக்கு பொலிஸ் நாய்களின் உதவி தேவைப்பட்டால், தொடர்புடைய பாடசாலையின் அதிபர் இலங்கை பொலிஸ் நாய் பிரிவின் பணிப்பாளரை தொடர்பு கொண்டு தேவையான உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# சாணக்கியனின் தந்தை காலமானார்



மட்டக்களப்பு, நவ. 09

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் தந்தையும் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு தொகுதி மறைந்த இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் சி.மூ.இராசமாணிக்கத்தின் மகனுமாகிய வைத்தியர் இராஜபுத்திரன் இராசமாணிக்கம் நேற்று முன்தினம் பிற்பகல் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 6.00 மணியளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, நவ. 09

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ள திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மாதம் 28 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் விண்ணப்பங்களை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், அடுத்த அணியினருக்கான தேசிய கல்வியியற் கல்லூரிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்களும் தலைமைப் பண்பும்...

-ஐவி.நாகராஜன்

## விதைத்துக்கொண்டே இரு...
## முளைத்தால் மரம் இல்லையேல் உரம்!

என்கிற தன்னம்பிக்கை வரிகளுக்கு ஏற்ப சோர்வடையாத உழைப்பால் நிகழ்ச்சிகளை தொடர்ந்துகொண்டே இருப்பவர்கள்தான் பிறரை வழிநடத்தும் தலைவர்களாக உயர்வடைகிறார் கள். தலைவன் என்பவன் தலைமையிடத்தில்இருப்பவன் அவனிடம் அதிகாரம் இருக்கிறது. அவன் சொல்லுக்கு பலம் இருக்கிறது. கூடுதல் மதிப்பு இருக்கிறது. தலைவன் மிக உயரத்தில் இருக்கிறான் அவனுடைய கூட்டமோ மிக அதிகம். அதனால் பல தலைவர்க ளால் எல்லா நேரமும் எல்லோருடனும் கலந்து பழக, சேர்ந்து இருக்க, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள முடியாது. அந் தத் தலைவர்களுக்கு கீழ் அவருடன் நேர டியாக தொடர்பு கொண்டிருக்கும்சிலர் இருப்பார்கள். அவர்கள்தான் தினந்தோ றும் தலைவர்களுடன் பேசுவார்கள் ஆலோசிப்பார்கள்.

தலைவன் என்ன சொல்கிறான் என்ன நினைக்கிறான் என்பதையும் மற்றவர்க ளுக்குச் சொல்வதும் அவர்கள்தான். தலைவன் நடுநாயகமான ஒரு புள்ளி என் றால், அந்த புள்ளியைச் சுற்றி வரையப் பட்ட முதல்நெருக்கமான வட்டத்தில் சிலர் இருப்பார்கள். அரசியல் கட்சிகள் என்றில்லை, நிறுவனங்களில்இருக்கும் தலைவர்களுக்கும் இதேபோல் நெருக்க மான உள்வட்டம் உண்டு. தலைவர்கள் சுதந்திரமாக இருப்பது சில இடங்களில் தான் சிலரிடம் மட்டும்தான். அந்தச் சிலர்தான் நெருக்கமானவர்கள், உள்வட் டம் என அறியப்படுபவர்கள்.

இதுதவிர தலைவர்களுக்கு சில சீடர்களும் இருக்கலாம். சீடர்கள் என் றால் யார்? தலைவர்களிடம் கற்றுக் கொள்பவர்கள். தலைவர் மீது அன்பு, மரியாதை எல்லாம் உடையவர்கள். முழு நேரமும்தலைவருடனேயே இருந்து பணிவிடை செய்பவர்கள். இவர்கள்தான் சீடர்கள். இவர்களால் தலைவர்களுக்கும்தலைவர்களால் இவர்களுக்கும் நன் மைகள் உண்டு. தலைவர்களின் வெற்றி-தோல்விக்கும் இவர்களின் பங்கு முக்கிய மானது.

தலைமை என்பது ஒரு பதவி. ஒரு பொறுப்பு. அது எப்படியேனும் கிடைக் கலாம் தகுதி திறமையின்காரணமாகவும் கிடைக்கலாம். தலைவனைக் காட்டிலும் திறமைவாய்ந்த சீடர்கள் அமைந்துவி டுவதும் உண்டு.



அப்படிப்பட்ட திறமைவாய்ந்த சீடர் களை வளர்த்துவிடும் தலைவர்களும் உண்டு. தனக்குப் பிரச்னை என்று கருதி அழிப்பவர்களும் உண்டு. அது தலைவனின் மனப் பக்குவத்தை பொருத்தது. ஆனால், சீடர்களை அழிக்கவே முடியாது. இங்கு இல்லாவிட்டால் வேறு இடம் என அவர்கள் வளர்ந்துவிடுவார்கள். வரலாற்றில் இதற்குப்பல்வேறு உதார ணங்களைக் காட்ட இயலும்.

தலைவர்கள் தங்கள் வாழ்நாளில் எங்கோ தொடங்கி தொடர்ந்து முயன்று தங்களின்கடின உழைப்பால்,அறிவால், திறமையால் தலைமைப் பண்புகளால் தலைவர்கள் ஆனவர்கள்.பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மாவீரன் நெப்போலியன் வலிமை யான மனம் படைத்தவனாக விளங்கினான். எப்போதும் விழிப்போடும் பொறுப்போடும் செயல்பட்டான். அன்றாட வாழ்வில் குறைந்த நேரமே தூங் கும் பழக்கம் உடையவனாக இருந்தான். அந்தக் குறைந்த நேர தூக்கத்தைக்கூட தான் பயணம் செய்யும் குதிரையின் மீதே கழிக்கக்கூடியவனா கச் செயல்பட்டான். எதிலும், அவன் தலைமை வகிக்க எண்ணினான். பிறரின் கீழ் அடிமையாக இருப்பதை வெறுத்தான். தலைமைப் பண்புகளையும் நிர்வாகத் திறன்களையும் வளர்த்துக் கொண்டான்.

சிறுவயதில் நெப்போலியனின் குள்ளமான உருவத்தைக் கண்ட அவனது தந்தை, "மகனே! நீ இசைத்துறையில் கவனம் செலுத்தினால் புகழ் பெறலாம் எனவே, இசையை கற்றுக்கொள்" என்றார். அதற்காக அவர் கூறிய காரணம், இசை யைக் கற்றுக் கொண்டால் நிறைய வருமானம் கிடைக்கும் என்பதும், இசையை வெளிப்படுத்த தோற்றம் முக்கியமல்ல என்பதும்தான். அதற்கு நெப்போலியன் தன் தந்தையிடம், "அப்பா! நான் ஆயிரம் பேர்களின் முன்னே இசை நிகழ்ச்சியை நடத தும் சொற்ப தகுதியுடையவன் அல்ல. நான் பெரிய அரசனாக வரவே விரும்புகிறேன்" என்றான்.பின்னாளில் நெப்போலியன் தனது பெரும் முயற்சியால் ராணுவத்தில் சேர்ந்தான். சிறப்பாகச் செயல்பட்டு அதில் பெரும் பதவிகள் பெற்று உயர்ந் தான். அவனது மனம் உயர்ந்த எண்ணங் களாலும்,மிகப் பெரிய லட்சியங்களாலும் நிரம்பி இருந்தது. அத்தகைய லட்சிய நோக்கம் அவனுடைய முயற்சி யால்மிக உயர்ந்த இடத்துக்கு அவனை அழைத்துச் சென்றது. நாளடைவில் ராஜ தந்திரங்களையும் போர் நுணுக் கங்க ளையும் வெகுவாகக் கற்றான். நெப்போ லியன் போனபார்ட் என்கிற மாவீரனின் தலைமைப்பண்பையும் மதிநுட்பத்தை யும் உலகமே வியர்ந்து பார்க்கும் அள வுக்குப் பல நாடுகளை வென்றான். முடிவில்ஈடு இணை இல் லாத மாவீரனாகவும், பேரரசனாகவும் வரலாற்றில் உயர்ந்து காட்டினான்.

கைகளை ஊன்றித் தானே தன் முயற் சியால் எழுந்து நின்றவர்கள் தலைவர்கள் தலைவர் ஆவதற்காக தாங்களே முயன்று இயக்கங்கள் அமைப்புகளில் உழைத்து மேலே வந்தவர்கள். அவர்களின் முயற்சி யும் உழைப்பும் சாதரணமானது அல்ல. அடிமேல் அடி, வலிமேல் வலி, இழப்பு, தியாகம் என சிரமப்பட்டு உழைத்து மேலேவந்தவர்கள். இன்னொரு ரகம்-ஒருசில தலைவர்கள் தற்செயலாகவோ அல்லது சூழ்நிலை காரணமாகவோ தலைமைப் பொறுப்புக்கு வந்துவிடுவது உண்டு. மொத்தத்தில் எல்லாத் தலைவர்களும் சாகாவரம் பெற்றவர்கள் அல்லர். அதே போல், தங் கள் வாழ்நாள் முழுவதும்கூட தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களும் உண்டு.

காலம் ஒரு நாள் மாறும் என்ற பாடல் வரிக்கேற்ப தலைமையும் ஒரு நாள் மாறும் மாறித்தான் தீரும்அது காலத்தின் கட்டாயம்.தலைமை மாற்றம் அவசியமான ஒன் றாகும் அதுதான் நிறுவனத்துக்கும் இயக்கத்துக்கும் நல்லது. தலைவனை விட அமைப்பு முக்கியம் என்பதால், தலைமை மாற்றம் தவிர்க்கப்பட இயலாததாகும்.

# இந்தவார ராசிபலன் 25.05.2025 - 31.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - ஐப்பசி 23
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும். உத்தியோகத்தில் சில மாறுதல்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த உத்தியோக உயர்வு தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் தைரியமாக ஈடுபடலாம்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சுமையாக இருக்கும் , சில இடங்களில் சுவையாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். தொழிலை மேம்படுத்த தகுந்த நேரம்.பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடினமாக இருக்கும் , சில இடங்களில் சுலபமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வும் செல்வாக்கும் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளி போகலாம். வியாபாரத்தில் பொருள் வரவும் கையிருப்பும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நிதானமாக ஈடுபடலாம்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அதிகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும் , சில இடங்களில் நேர்த்தியாக இருக்கும். உத்தியோக ரீதியாக சங்கடங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். விற்பனையும் வெற்றியும் பண வரவும் அதிகரிக்கும்,

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இருக்கும் , சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சற்று சுணக்கமாக நடக்கும். பிள்ளைகளால் செலவுகள் வரலாம்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மிதமான பலன்கள் இருக்கும் . சில இடங்களில் வேலையில் அழுத்தம் இல்லாமல் இருக்கும் , சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் வருமானமும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடலாம்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வு வரலாம், ஆனால் நினைத்த ஒரு காரியம் சற்று தாமதமாக நடக்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சோதனை உண்டாகும் , சில இடங்களில் சாதனை இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு வேலை மாறுதல் தள்ளிப் போகலாம். அமைதி உண்டாகும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும் , சில இடங்களில் பரபரப்பு நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகலாம். புதிய தொழிலில் நம்பிக்கையாக ஈடுபடலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சவால் உண்டாகும் , சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். நிம்மதி பிறக்கும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நன்மை தீமை கலந்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் கடுமையாக இருக்கும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு லாபம் கிடைக்கும், புதிய முயற்சிகளுக்கு வெற்றிகரமான நேரம்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கும். சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வுகளை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் பண வரவு அதிகமாக இருக்கும். புதிய திட்டங்களுக்கு சிறப்பான நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகும், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவதற்கு தமிழரசு கட்சிக்கு வந்திருக்கும் திடீர் அக்கறை



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

அரசியல் கட்சிகளின் கூட்டணிகள் உருவாகுவதற்கு அரசியல் நிர்ப்பந்தங்களே காரணம். இலங்கை தமிழரசு கட்சிக்கு அவ்வாறு எத்தகைய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டதோ தெரியவில்லை. மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கு அதன் தலைவர்கள் கடந்த வாரம் விருப்பத்தை வெளிப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

வவுனியா நகரில் நவம்பர் 5ஆம் திகதி தமிழரசு கட்சியின் மத்தியகுழு கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்கள் மத்தியில் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் சகிதம் உரையாற்றிய பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு தங்களது கட்சியின் நிலைப்பாட்டை தெரியப்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் அதற்கு இணங்கி வந்தால் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படமுடியும் என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் வரவு - செலவு திட்டம் மீதான விவாதத்தில் தமிழரசு கட்சியின் பாராளுமன்றக்குழு எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது குறித்தும் வேறு விவகாரங்கள் தொடர்பாகவும் மத்திய குழு கூட்டத்தில் பிரதானமாக ஆராயப்பட்டது என்று கூறிய சுமந்திரன், முதன்மையான தமிழ் அரசியல் கட்சி என்ற வகையில் தமிழரசு கட்சி மற்றைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆகியவையும் வேறு சில குழுக்களுமே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலமாக இயங்கி வருகின்றன. அவற்றின் தலைவர்களை நோக்கியே சுமந்திரன் இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் தலைவர் சிவஞானமும் தானும் ஏற்கெனவே கலந்துரையாடியிருப்பதாகவும் தாங்கள் தெரிவித்த நிலைப்பாடுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டால் முன்னரைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் கூறிய சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடனும் இது தொடர்பாக பேசலாமா என்று மத்திய குழுவில் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த அழைப்பை உடனடியாகவே வரவேற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மீண்டும் இணைந்து செயற்படுவதற்கு தமிழரசு கட்சி முன்வைத்திருக்கும் முன்னிபந்தனைகள் எவை என்று தங்களுக்கு தெரியவில்லை என்றும் இரு தரப்பினரும் இதுவரையில் உத்தியோகபூர்வமாக எந்தவிதமான பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்றும் குறிப்பிட்டார். பேச்சுவார்த்தைக்கு முன்னதாக நிபந்தனைகளை விதிப்பது ஏற்புடைதல்ல என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய அமைப்பாக இயங்கி வருகிறது. தனியான யாப்பையும் சின்னத்தையும் கொண்டிருக்கும் அந்த கூட்டணி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் இருக்கிறது. அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஏற்கெனவே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் அந்த கூட்டணி செயற்பட்டு வருகிறது.

ஆனால், அரசியலமைப்புக்கான 13 திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் மாகாண சபைகள் முறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கொண்டிருக்கும் நிலைப்பாடு காரணமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி அசௌகரியத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. தமிழரசு கட்சியின் அழைப்பை பிரேமச்சந்திரன் வரவேற்றிருப்பது இரு தரப்பினருக்கும் இடையிலான புரிந்துணர்வை மேலும் கேள்விக்கு உள்ளாக்குகிறது.

அதேவேளை, இணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைக்கு தமிழரசு கட்சி முன்னிபந்தனைகளை விதிப்பது ஏற்புடையது அல்ல என்று கூறிய பிரேமச்சந்திரன் எதிர்கால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது குறித்து தெரிவித்த கருத்துக்கள் உண்மையில் முன்னிபந்தனைகள் போன்றே அமைந்திருக்கின்றன. முன்னைய கூட்டமைப்பில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் அந்த கருத்துக்களை அவர் முன்வைத்திருக்கிறார் என்பது வெளிப்படையானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகவோ அல்லது எந்தவிதமான யாப்பையும் கொண்டதாகவோ இருக்கவில்லை. மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்க வேண்டுமானால் அதற்கென்று தனியான யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதுடன் அங்கத்துவ கட்சிகளின் தனித்துவத்தைப் பேணக்கூடியதாக இருக்க வேண்டும். தங்களை முதன்மையான அல்லது தலைமைத்துவ கட்சி என்று தமிழரசு கட்சி அழைத்துக்கொள்வதாக இருந்தாலும் கூட, சகல அங்கத்துவக் கட்சிகளையும் அரவணைத்து மெய்யாகவே புரிந்துணர்வுடன் கூட்டாகச் செயற்படுகின்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரேமச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

காலஞ்சென்ற மூத்த தமிழ்த் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் தலைமையில் 2001 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போர்க் காலத்தில் சுயாதீனமான முடிவுகளை எடுத்துச் செயற்பட முடியவில்லை. அதற்கான காரணம் புரிந்து கொள்ளக்கூடியதே. விடுதலை புலிகள் இயக்கமே இலங்கை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று பாராளுமன்றத்திலும் வெளியுலகிலும் குரல் கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு இயக்கம் போன்றே கூட்டமைப்பு செயற்பட்டது.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பிறகு தமிழ் மக்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயம் ஒன்று இல்லாத சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் பலம் பொருந்திய ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக கட்டியெழுப்புவதற்கு சம்பந்தன் உட்பட தமிழ் அரசியல்வாதிகள் தவறியது குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

கஜேந்திரகுமாரின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 2010 ஏப்ரில் பொதுத்தேர்தலின்போது கூட்டமைப்பில் இருந்து வெளியேறியது. பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். 2015 ஆகஸ்ட் பொதுத் தேர்தலின்போது கூட்டமைப்பில் போட்டியிட்ட போதிலும், 2017 ஆம் ஆண்டு அதிலிருந்து வெளியேறியது. இரு கட்சிகளும் வெளியேற்றத்துக்கான தங்கள் தரப்பு காரணங்களை முன்வைத்தன என்ற போதிலும், தேர்தல் அரசியலும் அதற்கு ஒருகாரணி.

> **“நடைமுறைச் சாத்தியமான இடைக்காலத் தீர்வுகளைப் பற்றி அக்கறைப்படாத எதிர்மறையான அரசியல் கலாசாரத்துக்கு தமிழர் அரசியல் சமுதாயம் விடைகொடுக்க வேண்டும்.”**

கூட்டமைப்பில் இருந்து புளொட்டும் ரெலோவும் 2022 ஆம் ஆண்டு வெளியேறின. உள்ளூராட்சி தேர்தல்கள் கலப்பு தேர்தல் முறையில் நடத்தப்படுவதன் காரணமாக கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டால் கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்றும் தேர்தலுக்கு பிறகு உள்ளூராட்சி சபைகளின் நிருவாகங்களை கூட்டாக அமைக்க அது வசதியாக இருக்கும் என்றும் தமிழரசு கட்சி முன்வைத்த யோசனையை அவ்விரு கட்சிகளும் ஆட்சேபித்தன.

ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்க காலத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறவில்லை. இறுதியாக தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே கடந்த மேமாதத்தில் அந்த தேர்தல்களை நடத்தியது. பல்வேறு அணிகளாக பிரிந்து நின்று போட்டியிட்ட தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சி நிர்வாகங்களை அமைப்பதில் வடக்கிலும் கிழக்கிலும் எவ்வாறு நடந்துகொண்டன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. தற்போது அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை அடுத்த வருடத்தில் நடத்துமா இல்லையா என்ற கேள்வி எழுந்திருப்பதற்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் செயற்படுவதற்கான விருப்பத்தை தமிழரசு கட்சி வெளிப்படுத்தியிருக்கிறது.

சகல தமிழ்க் கட்சிகளையும் இணைத்து செயற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருக்கும் சுமந்திரன் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ்க் கட்சிகள் ஒரே நிலைப்பாட்டை முன்வைக்குமா என்ற கேள்வி எழுந்திருப்பதாக கூறியிருக்கிறார். கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்திடம் தமிழரசு கட்சி முன்வைத்த யோசனையை மற்றைய தமிழ்க் கட்சிகளுக்கு காண்பிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் அந்த யோசனைகள் தொடர்பில் அவர்கள் இணங்கிவந்தால் அதை பொதுநிலைப்பாடாக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சகல தமிழ்க் கட்சிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவது நடைமுறையில் ஒருபோதும் சாத்தியமில்லை. ஆனால், பெரும்பான்மையான கட்சிகளை அரவணைத்து மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவதாக இருந்தாலும் கூட, கடந்த காலத்தில் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகளை தோற்றுவித்த காரணிகள் மீண்டும் தலைகாட்டாமல் இருப்பதை உறுதி செய்வது முக்கியமானதாகும்.

பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்துக்கள் குறித்து தமிழரசு கட்சியின் தலைவர்களிடமிருந்து உடனடியாக பிரதிபலிப்பு எதுவும் வரவில்லை. அவர்களும் கடந்த காலத்தின் கூட்டமைப்பு அனுபவங்களை கருத்தில் எடுத்து மீண்டும் அநாவசியமான முரண்பாடுகள் தோன்றாமல் இருப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். மற்றைய தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை, தமிழரசு கட்சி மேலாண்மை செலுத்தும் மனோபாவத்துடன் நடந்துகொள்கிறது என்பதே பிரதானமான முறைப்பாடாக இருந்து வந்தது.

எது எவ்வாறிருந்தாலும், மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதில் தமிழரசு கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் ஆர்வமும் அதற்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தரப்பில் இருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கும் நேர்மறையான பிரதிபலிப்பும் நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டியவை. ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் காலந்தாழ்த்தாமல் விரைவில் தொடங்க வேண்டும்.

தமிழ்க்கட்சிகள் பல்வேறு அணிகளாகச் சிதறியிருப்பதால் தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான அணுகுமுறைகளைப் பொறுத்தவரை ஒருமித்த நிலைப்பாடுகளை எடுக்க முடியாமல் இருக்கிறது என்று தமிழ் மக்கள் நீண்ட நாட்களாகவே கவலையடைந்திருக்கிறார்கள். கடந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் தேசிய மக்கள் சக்திக்கு அவர்கள் பெருமளவில் வாக்களித்ததற்கான காரணங்களில் அதுவும் ஒன்று.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் சர்வதேச மற்றும் உள்நாட்டு நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்றமுறையில் விவேகமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான அரசியல் அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதில் தமிழ்க் கட்சிகள் அக்கறை காட்டவில்லை என்பது தமிழ் மக்களின் முக்கியமான மனக்குறை. வெறுமனே ஒன்றிணைந்து செயற்படுவது மாத்திரம் போதுமானதல்ல. நீண்டகால அரசியல் இலக்குகளைப் பற்றி மாத்திரம் பேசிக் கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளை கையாளுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

சுமந்திரன் கூறிய தகவல்களின் பிரகாரம் நோக்கும்போது தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனையை முன்வைப்பதே மீண்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயற்பட வேண்டும் என்ற அக்கறையின் அடிப்படை நோக்கம் என்று தெரிகிறது. சகல தமிழ்க் கட்சிகளுமே ஒற்றையாட்சியை எதிர்ப்பதுடன் சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றையே தங்களது கொள்கையாகவும் கொண்டிருக்கின்றன. அதனால் ஒருமித்த நிலைப்பாட்டை முன்வைப்பதில் எந்த பிரச்சினையும் எழுவதற்கில்லை.

அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கும்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையை தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைப்பதற்கு புறம்பாக, அதற்கு முன்னரான காலப்பகுதியில் இடைக்காலத் தீர்வு தொடர்பில் குறிப்பாக, மாகாண சபைகள் முறைமையை பயன்படுத்துவதிலும் கருத்தொருமிப்புடன் செயற்பட வேண்டும்.


மாகாணசபைகள் முறையைப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் பலவற்றின் மத்தியில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் அக்கறை மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற தமிழரசு கட்சியின் விருப்பத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமையும். மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்தவும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய வெகுஜன ஜனநாயக அரசியல் இயக்கத்தை உடனடியாக முன்னெடுப்பது பரந்தளவில் தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் ஓரணியில் வருவதற்கு பெரும் உத்வேகத்தைக் கொடுக்கும். நடைமுறைச் சாத்தியமான இடைக்காலத் தீர்வுகளைப் பற்றி அக்கறைப்படாத எதிர்மறையான அரசியல் கலாசாரத்துக்கு தமிழர் அரசியல் சமுதாயம் விடைகொடுக்க வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990 அக்டோபர் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம்: தேசிய துன்பியல் நிகழ்வாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா



பொதுமக்களின் நினைவில் இருந்து பெரும்பாலும் மங்கிப்போன பெருங்குற்றம் ஒன்றின் 35 வது வருடாந்தம் அக்டோபர் 30 ஆம் திகதி குறித்து நின்றது. வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட பிறகு 35 வருடங்கள் கடந்து போனதை முன்னிட்டு 'வரலாற்றுப் பேச்சுவார்த்தை -

நினைவுக்கான கூட்டமைப்பின் (Collective for Historical Dialogue & Memory ) ஒத்துழைப்புடன் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரகம் ஒரு விவரணத் திரைப் படக்காட்சியையும் கலந்துரையாடலையும் ஏற்பாடு செய்திருந்தது. 1990 ஆம் ஆண்டில் அன்றைய தினம் வடக்கில் இருந்த முஸ்லிம் மக்கள் சகலரையும் சில மணி நேரத்திற்குள் அவர்களின் வீடுகளை விட்டு வெளியேறுமாறு விடுதலை புலிகள் உத்தரவிட்டனர். தமிழ் மக்களின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் குடும்பங்கள் வெளியேறுவதற்கு இரு மணி

நேரம் மாத்திரமே வழங்கப்பட்டது. வடக்கின் ஏனைய பாகங்களில் இந்த காலஅவகாசம் ஒன்று அல்லது இரண்டு

நாட்களாக இருந்தது.

முஸ்லிம் மக்களிடம் உடைகளையும் ஒருசில உடைமைகளையும் மாத்திரமே எடுத்துச் செல்ல முடியும் கூறப்பட்டது.

அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கு எதிராக எடுக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு நடவடிக்கை என்று கூறி

முஸ்லிம்களின் வெளியேற்றத்தை விடுதலை புலிகள் நியாயப்படுத்தினர். சோதனை நிலைகளில் விடுதலை

புலிகள் அந்த மக்களிடமிருந்து பணம், நகைகள் மற்றும் சொத்துக்களின் உறுதிப்பத்திரங்களை பறிமுதல்

செய்தனர். சில பெண்களிடமிருந்து அவர்களின் திருமண கழுத்துமாலை கழுத்தில் இருந்து அறுத்தெடுக்கப்பட்டது. நியாயம் கேட்க முயன்றவர்களிடம் அல்லது மன்றாடியவர்களிடம் எல்லாமே

தமிழீழத்தில் சம்பாதிக்கப்பட்டதே, அதனால் தமிழீழத்துக்கே அவை சொந்தமானவை என்று கூறப்பட்டது.

வெளியேற்றப்பட்ட மக்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்துக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது.

பலர் புத்தளத்துக்கும் நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் நடந்தும் நெரிசல் மிகுந்த படகுகள் மூலமும்

சென்றனர். அவர்கள் பாடசாலைகள், கோவில்கள் மற்றும் மரங்களின் கீழ் தூங்கினார்கள்.

இடம்பெயர்ந்த மக்களாக பல வருடங்களாக அவர்கள் வாழ்ந்தார்கள். ஆயிரக்கணக்கான தமிழர்களும்

சிங்களவர்களும் மரணமடையவும் காயமடையவும் வீடுவாசல்களை இழக்கவும் காரணமான போர் முஸ்லிம் மக்களின்அவலங்களை மறைப்புச் செய்து விட்டது.

பரந்தளவில் மூண்ட போரின் கிளைக் கதைகளில் ஒன்றாக - எந்தவிதமான விசேட முன்னுரிமையும் கொடுக்கப்படாததாக முஸ்லிம்களின் இந்த வெளியேற்றம் மாறியது. அதற்கு பிறகு அரசாங்கத்தினதும் சர்வதேச நிறுவனங்களினதும் கவனம் பரந்தளவில் இடம்பெயர்ந்த பத்து இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் மீது திரும்பியது. வளங்கள் பற்றாக்குறையாக இருந்தபோது முன்னுரிமைகள் குறித்து தீர்மானிக்க

வேண்டியிருந்தது. உயிர்களை அல்ல தங்களது நிலங்களையும் சொத்துக்களையும் இழந்த வடக்கு முஸ்லிம் உதவி

வழங்கப்படுவோருக்கான பட்டியலில் தாழ்ந்த மட்டத்திலேயே விடப்பட்டனர்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் 2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த

பின்னரும் கூட தொடர்ந்தும் குறைவான கவனத்தையே பெற்றது. அவர்கள் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்புவதை தடுப்பதற்கு விடுதலை

**சகல சமூகங்களுமே போரினால் போதிக்கப்பட்டு துன்பங்களை அனுபவித்திருக்கிறது. தேசிய அபிவிருத்திச் சவாலை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்கு ஆரோக்கியமும் உறுதிப்பாடும் கொண்ட தேசமாக இலங்கை வளரவேண்டுமாக இருந்தால் சகல சமூகங்களும் காயங்களையும் குணப்படுத்த வேண்டியது அவசியமாகும்.**

புலிகள் இல்லாவிட்டாலும் முட்டுக்கட்டைகள் தொடரவே செய்கின்றன.

முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்கு பின்னரான சுமார் இரு தசாப்தங்களில் அவர்களுக்குச் சொந்தமான நிலங்கள் கைமாறிவிட்டன.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 500 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு நிலத்தில் முஸ்லிம் சமூகங்கள் வாழ்ந்த முசலி போன்ற பகுதிகளில் இப்போது சுமார் 70 சதுர கிலோமீட்டர் பரப்பளவு நிலம்

மாத்திரமே கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. அதையும் கூட அவர்கள் இடம்பெயர்வுக்கு உள்ளான தமிழ்ச்

சமூகங்களுடன் பகிர்ந்து கொள் வேண்டிய தேவை இருக்கிறது. விடுதலை புலிகளிடமிருந்து மீட்ட நிலங்களைஇராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது. அந்த நிலங்களை இராணுவம் மூலோபாய நோக்கங்களுக்காகதொடர்ந்தும் அதன் வசம் வைத்தி ருக்க விரும்புகிறது. வடக்கில் ஒரு சிறுபான்மையினராக தங்களை உணரும் முஸ்லிம்கள் தங்களது வலிமையற்ற நிலை காரணமாக இராணுவ பிரசன்னத் தையும் பொறுத்துக் கொண்டு வாழ வேண்டியிருக்கிறது.

இடம்பெயர்ந்த முஸ்லிம்களில் பலர் தனிப்பட்ட முயற்சிகளின் ஊடாகவும் அரசாங்கம் மற்றும் உதவி நிறுவனங்களின் ஆதரவுடனும் வேறு இடங்களில் தங்களது வாழ்வை மீளக்கட்டியெழுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் மீளக்குடியமர்ந்த இடங்களில் குறிப்பாக, புத்தளத்திலும் வடமேல் மாகாணத்திலும் காணிகளையும்

வீடுகளையும் பெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், இந்த அருஞ்செயல்கள் அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

வடக்கில் உள்ள அதிகாரிகள் அந்த மக்களை சிலவேளைகளில் பல்வேறு சொத்துக்களைக் கொண்டிருப்பவர்களாக கருதி உதவிகளை வழங்குவதில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்று நடத்துகிறார்கள்.

இழந்த வீடுகளுக்கு அவர்கள் திரும்பும்போது இவ்வாறு நடக்கிறது. இத்தகைய அணுகுமுறை வெளியேற்றப்பட்ட

முஸ்லிம்களுக்கு மரபுரீதியான அவர்களின் வீடுகளுடன் இருக்கும் கலாசார மற்றும் உணர்வுபூர்வமான பிணைப்பை அவமதிப்பதாக இருக் கிறது. அவர்களைப் பொறுத்தவரை, வடக்கிற்கு திரும்புவது என்பது மேலும்

கூடுதல் சொத்துக்களை பெறுவது பற்றியதல்ல, தங்களது அடையாளத்தையும் பாதுகாப்பு உணர்வையும் மீட்டெடுப்பதாகும் போரின் முடிவுக்கு பின்னர் நாட்டின் தென்பகுதியில் சிங்களவர்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகள் அடிக்கடி கிளம்பியது அந்த மக்களின் எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வை

ஆழமாக்கியது. முஸ்லிம்களுக்கு எதிராக உணர்வுகள் தூண்டிவிடப்படுவதை தடுப்பதற்கு அரசாங்கம் உறுதியுடன் செயற்பட்டு சட்டத்தின் ஆட்சியை சகலருக்கும் சமத்துவமான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு குழுவினருக்கு எதிரான அநீதி சகித்துக் கொள்ளப்படுமானால், இறுதியில் அது சகலரையும் சூழ்ந்துவிடும். பாதுகாப்பு என்பது மேலாண்மையில் அல்ல, நீதி தங்களைப் பாதுகாக்கும் என்று சகல குடிமக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்துவதிலேயே தங்கியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியல் அனுகூலத்துக்காக இனத்துவ தேசியவாதம் பயன்படுத்தப்படுவதற்கு

அனுமதிக்கப்போவதில்லை என்ற அதன் வாக்குறுதிக்கு உண்மையாக நடந்து கொள்கிறது. ஆனால், விடுதலை

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு நாட்டை ஐக்கியப்படுத்தல் மனங்களின் ஐக்கியமாக இன்னமும்

மாற்றப்படவில்லை. சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக, தமிழர்களும் முஸ்லிம்களும் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் இருந்து தாங்கள் விலக்கி வைக்கப்படுவதாகவும் பாரபட்சங்களினாலும் வன்முறைகளி னாலும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருப்பதாகவும் இன்னமும் உணருகிறார் கள்.

சகல குழுக்களினதும் மனக்குறைகள் நேர்மையான முறையில் கையாளப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகும். போர்க்கால இடம்பெயர்வின் பின்னணியில் நோக்கும்போது இடம்பெயர்ந்த சகல மக்களும் -- தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் -- தங்களது சொந்த இடங்களுக்குதிரும்புவதற்கான உரிமையை உறுதி செய்யும் கொள்கை ஒன்றை அரசாங்கம் பிரகடனம் செய்ய வேண்டியதும் அந்த கொள்கை ஒளிவுமறைவின்றி நடைமுறைப்படுத்துவதற்கு நிருவாகப் பொறிமுறை ஒன்றை

நிறுவவேண்டியதும் அவசியமானதாகும். தேசிய நல்லிணக்கத்துக்கான கட்டமைப்பின் ஒரு அங்கமாக நிறுவப்பட்ட இழப்பீட்டுக்கான அலுவலகம் இது விடயத்தில் முக்கியமான பாத்திரத்தை வகிக்க முடியும். இழப்பீடு என்பதன் அர்த்தம் பாதிக்கப்பட்டவர்களை,

வன்முறைகள் இடம்பெறாமல் இருந்திருந்தால் அவர்கள் எத்தகைய நிலையில் இருந்திருப்பார்களோ அந்த

நிலைக்கு சாத்தியமானளவுக்கு மீளக்கொண்டு வருவதேயாகும்.

சகவாழ்வின் பிணைப்புகள் முறியும்போது என்ன நடக்கலாம் என்பதற்கு வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமை வேதனை மிகுந்த ஒரு நினைவூட்டியாக விளங்குகிறது. மனிதாபிமானத்தை இனத்துவதேசியவாதம் விஞ்சும்போது என்ன நடக்கிறது என்பதற்கு வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றம்

ஒரு எச்சரிக்கையாகும். துன்பமும் வேதனையும் ஒரு சமூகத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாக இருப்பதில்லை

என்பதையும் அது நினைவூட்டுகிறது.

1990 அக்டோபரை நினைவுகூருவது எந்த ஒரு குடிமகனும் அவரது அடையாளம் காரணமாக வீட்டிலிருந்துமீண்டும் ஒருபோதும் விரட்டப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கு சகல இலங்கையர்களுக்கு விடுக்கப்படும் அழைப்பாகும். ஒவ்வொரு சமூகமும் அதன் மௌனத்தையும் தவறுகளையும் குறித்து மீள்சிந்தனை செய்யவேண்டிய அவசியத்தையும் அது வலியுறுத்துகிறது. ஒவ்வொரு சமூகமும் அதனால் விழைவிக்கப்பட்ட வேதனைக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு மற்றைய சமூகத்துக்கு நேசக்கரத்தை நீட்டும்போது உண்மையான நல்லிணக்கம் தொடங்குகிறது.

அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களுடன் சேர்ந்து பேச்சுவார்த்தைக்கும் பரஸ்பர புரிந்துணர்வுக்குமான இடப்பரப்பை உருவாக்கும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது

அவசியமானதாகும். போர் சகல சமூகங்களையும் பாதித்திருக்கிறது. அதனால் ஒவ்வொரு சமூகத்தினதும்

குரலுக்கு மதிப்புக் கொடுத்து நேர்மையான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டியது நல்லிணக்கத்துக்கு

அவசியமாகும். ஒரு குழுவின் துன்பம் கவனிக்கப்படாமல் போகும்போது எதிர்ப்புணர்வு வளர்ந்து அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பலவீனமடைகிறது.

அதனால் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தனியொரு சமூகத்தின் உள்விவகாரமாக

அலாலாமல், ஒரு தேசிய துன்பியல் நிகழ்வாக ஏற்றுக்கொள்ள வேண்டும். 35 வருடக்களக்கு பின்னரும் கூட, வடக்கு முஸ்லிம்கள் இன்னமும் தங்களுக்கான நீதியை பெறவில்லை என்பதும் வழமையானவாழ்வுக்கு முழுமையாகத் திரும்பவில்லை என்பதும் இலங்கையை சகல சமூகங்களையும் அரவணைக்கின்றதும்

சமூகங்களுக்கு இடையில் இணக்கப் போக்கைக் கொண்டதுமான நாடாக இலங்கையை கட்டியெழுப்ப முடியாமல் இருப்பதில் உள்ள தோல்வியை பிரதிபலிக்கின்றன.

தற்போதைய அரசாங்கமும் அதற்கு முன்னதாக பதவியில் இருந்த அரசாங்கங்களும் அமைப்பதாக

உறுதியளித்த உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட

முஸ்லிம்கள் தேசத்தின் பெதுவான வரலாற்றின் அங்கமாக வருவதற்கு ஏதுவாக அவர்களின் துன்பியல் அனுபவங்களை பதிவு செய்ய வேண்டும். காயங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் மாத்திரமே இலங்கை உண்மையில் நல்லிணக்கப் போக்குடைய ஒரு தேசமாக மாறமுடியும்.

சகல சமூகங்களுமே போரினால் போதிக்கப்பட்டு துன்பங்களை அனுபவித்திருக்கிறது. தேசிய அபிவிருத்திச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஆரோக்கியமும் உறுதிப்பாடும் கொண்ட தேசமாக இலங்கை வளரவேண்டுமாக இருந்தால் சகல சமூகங்களும் காயங்களையும் குணப்படுத்த வேண்டியதுஅவசியமாகும். வெவ்வேறு சமூகங்கள் பரஸ்பர மதிப்புடனும் நம்பிக்கையுடனும் ஒன்றிணைந்து

வாழும்போதுதான் இந்த நாட்டின் பலத்தை மெய்மையாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கே செல்லும் அடுத்த புகையிரதம்? மாகாண தேர்தல் நடக்கும்! நடக்காது!

ஜனாதிபதி தோழர் அநுர குமர திஸ் ஸநாயக்க தமது அரசாங்கத்தின் இரண் டாவது வரவு செலவு திட்டத்தை சில நாட்களுக்கு முன்னர் சமர்ப்பித்தார். தோழரின் அரசாங்கத்தை எதிர்க்கட்சி கள் தத்தம் விருப்புக்கு ஏற்றவாறு தனித்தும் கூட்டாகவும் பிச்சுப்பிடுங்கும் வாய்ப்புக் காலம் இது.

ஜனநாயக தமிழ் தேசிய மக்கள் கூட்டணிரூபவ் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பாக மீண்டும் இணைந்து இயங்க விரும்பினால் தமிழரசு கட்சியின் நிலைப் பாட்டுக்கு இணங்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப் பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணிக் கும் இந்த அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

ரூகூ39அடுத்த புகையிரதம் விரைவில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் ரூங ரழவ் என்ற கோட்டை புகையிரத நிலை யத்தின் அறிவிப்புரூபவ் லண்டனில் இடம்பெற்ற முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழி யனின் பாராட்டுவிழா நிகழ்வில் தெரிவிக்கப்பட்டதன் மறைபொருள் அர்த்தப்படுத்தப்பட்டு பலராலும் பேசப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு வாரத்தில் வெளியான முக்கிய செய்திகளான இந்த மூன்றும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை யாதலால் அவற்றை உள்ளீடு செய்து அலசுவது இந்த வாரத்துக்குப் பொருத் தமாக தெரிகிறது. ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தி அரசின் வரவு செலவுத் திட்டத்தை அதன் நிதியமைச்சர் என்ற நிலையில் அநுர குமர கடந்த வாரம் சமர்ப்பித்தார். இந்த மாதம் 21ம் திகதி நுகேகொடையில் சில எதிர்க்கட்சிகள் இணைந்து அரசுக்கு எதிராக

நடத்தும் கூட்டத்தில் இந்த வரவு செலவுத் திட்டம் பேசுபொருளாக இருக்குமென எதிர்பார்க்கலாம்.




முன்னைய ஆட்சிக் காலங்களில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடி இனி வராது என்ற உச்சத்தில் அச்சம் வேண்டாமென்று அநுர குமர உறுதிய ளித்துள்ளார். வாழ்க்கைச் செலவு அதிக ரிப்புரூபவ் போக்குவரத்துச் செலவு ஏற்றம்ரூபவ் மின்கட்டண உயர்வு என்பவை ஏற்கனவே விசவாயுவாக ஏறியிருக்கையில்ரூபவ் சர்வதேச நாண யத்துடனான இணக்கம் ஆட்சியை நடத் திக் கொண்டிருக்கிறது.

இந்த ஆதரவு தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கை தேசிய மக்கள் சக்திக்கு இருப்பதால் ‘அச்சம் தவிர்’ வெளிவந்தி ருக்கிறது.

ஆனால்ரூபவ் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணாத நிலையில் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியாது என்று தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் தமதுரையில் எச்சரிக்கை செய்துள்ளார். பொருளாதார நெருக்கடிக்கும் பொருளா தார முன்னேற்றத்துக்கும் இடையிலான அர்த்தம் இங்கு பிசுபிசுத்து காணப்படு கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரே மதாச வரவு செலவுத் திட்டத்தை மக்க ளுக்கு சலுகை வழங்காத ஒன்றாக விமர்சித்துள்ளார்.

வறுமையும் வேலையின்மையும் அதிகரிப்பதால் மக்களுக்கு சலுகைகள் வேண்டுமென்பது இவரது பார்வை. மக்களுக்கு வேலை வாய்ப்புரூபவ்

உள்நாட்டு உற்பத்தி ஆகியவைகளை வலியுறுத்த வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர்ரூபவ் சலுகைகள் ஊடாக மக்களை வறுமைக்கோட்டின்கீழ்

இருத்தி சலுகைகள் ஊடாக அவர களை வாழவைக்க விரும்புவது அவரின் அடித்தட்ட அரசியல் பார்வையை பளிச்சிட்டுக் காட்டுகிறது.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த இவர் அங்கு பிரதமர் மோடி உட்பட பல்வேறு தரப்பின் முக்கியஸ் தர்களையும் சந்தித்து உரையாடினார். இலங்கைக் கான பல தேவைகளை இங்கு பட்டிய லிட்ட இவர்ரூபவ்



மாகாண சபைத் தேர்தலுக்கு பத்து பில்லியன் ரூயஅிபாவை ஒதுக்கியுள்ள ஜனாதிபதி அநுர குமரரூபவ் எல்லைநிர்ணயம் முடிந்த பின்னரே தேர்தல் என்பதால் அது எப்போது என்று சொல்ல முடியாதெனநேர்மையாகக் கூறியுள்ளார். ‘வடக்குக்கு அடுத்த புகையிரதம் விரைவில் யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்படும்’ என்று நீதிபதி இளஞ்செழியனுக்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற பாராட்டு நிகழ்வில் தெரிவிக்கப்பட்டதன் மறைபொருள் என்ன?

13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் இந்தியாவிடம் கோரியிருந்தார்.

1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தத் தில் ஜே.ஆரும் ராஜிவும் ஒப்பமிட்ட வேளை அதனை எதிர்த்து நின்ற முதலா மவர் சஜித்தின் தந்தையான அன்றைய பிரதமர் ரணசிங்க பிரேமதாச. அப்போது ராஜிவ் காந்தியை ராஜரீக முறையில் சந்திப்ப தைக்கூட இவர் நிராகரித் திருந்தார். 1990 மார்ச் மாதம் இந்திய இராணுவத்தை வெளியேற்றியதோடு அன்றைய வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை கலைத்தவரும் இவரே. அதேசமயம் இரு நாட்டு ஒப்பந்தத்தை எதிர்த்து நாடு முழுவதும் வன்செயலில் ரூடவ்டுபட்ட வர்கள் இன்று ஆட்சி புரியும் ஜே.வி.பி.யினர்.

இப்போதுரூபவ் அநுர குமர அரசி டம் அதே ஒப்பந்தத்தில் பிரசவமான 13ம் திருத்தத்தை நடைமு றைப்படுத்து மாறு ரணசிங்கபிரேமதாசவின் மகன் சஜித் நேரில் இந்தியாவிடம் கேட்கும் காட்சியும்ரூபவ் அதனை இழுத்தடிக்கும் ஜே.வி.பி.யின் போக்கும்ரூபவ் அரசிய லில் எது ஆதாயமோ அதன் பக்கமே காற்று வீசுமென்பதை காட்டுகிறது.

இதே போன்றதொரு காற்று வீச்சு டன் மாற்றுத் தமிழ் தேசிய கட்சிகளை நிபந்தனையுடன் தங்களுடன் இணைய வருமாறு தமிழரசு கட்சி அழைப்பு விடுத் துள்ளது. விடுதலைப் புலிகளால் உரு வாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்ட மைப்பை ஓர் உள்ளூராட்சித் தேர்தலை மையப்ப டுத்திப் பிளந்த சாதனை தமிழர சுக்கானது. இதனால் கூட்டமைப்பிலிருந்த மூன்று முன்னாள் ஆயுதக் குழுக்கள் தம்மை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என மாற்றிக் கொண்டன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் இரண்டு அணிகளுக்கும் எதிர்பாராத பாடத்தைக்கற்றுக்கொடுத்தது.

இதனால் கிடைத்த இடைவெளியை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் எட்டு எம்.பிக்களைப் பெற்றது டன் தமிழர் பிரதேசங்களில் எதிர்பார்க்காத எண்ணிக் கையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் வெற்றி கொண்டது.

தமிழ்த் தேசிய கட்சிகளின் பலவீனம் தமி ழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியை பலமாக்கியது. வரப் போகிறதென எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து இவர் கள் மீண்டும் இணைய வேண்டிய கட் டாயம் உருவாகியுள்ளது.

கடந்த புதன்கிழமை கூடிய தமிழரசு கட்சி நிர்வாகம்ரூபவ் பகிரங்கமாக பொது அழைப்பொன்றை விடுத்துள் ளது. தங்கள் கட்சியின்நிலைப்பாட்டுக்கு இணங்கினால் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பாக மீண்டும் இயங்கலாமென ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு இந்த அழைப்பு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இந்த அழைப்பு என்று செய்திகள் கூறுகின்றன.

### பனங்காட்டான்

இதற்கு பதிலளித்துள்ள ஜனநாயக கூட்டணியினர் ரூபவ் தமிழரசு கட்சியின் நிபந்தனைகள் என்னவென்று தங்களுக் குத் தெரியாதென கைவிரித்துள்ளனர். பேசிய பின்னர் இணையலாமே தவிர ரூபவ் பேசுவதற்கு முன்னர் நிபந்தனை களை வைக்கக்கூடாதென்றும் இவர்கள்சுட்டியுள்ளனர்.

இணைவதற்கு முன்னர் நிபந்தனைகளை விதிப்ப தானது கொக்குக்கு தட்டில் பால் வார்த்த கதை போன் றது.மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெ றுமென்ற எதிர்பார்ப்புடன் தமிழரசின் முன்னாள் எம். பி. சுமந்திரன் கட்சிசார்பில் முதல மைச்சர் பதவிக்கு போட்டியிடுவார் என்ற பரவலான செய்திகளின் பின்ன ணியில் பிரிந்தவர்கள்மீண்டும் கூடுவது அவசியமென் பது தெரிகிறது. ஆனால்ரூபவ் மாகாண சபைத் தேர்தல் எப்போது என்பது - முன்னர் ஒரு தடவை

குறிப்பிட்டதுபோல புரியாத புதிராக உள்ளது.

மாகாண சபைத் தேர்தலை கோரு பவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகை யில் தமது வரவு செலவுத் திட்டத்தில் பத்து பில்லியன்ரூயஅிபாவை அநுர குமர அரசு ஒதுக்கியுள்ளது. ஆனால் ரூபவ் எல்லை நிர்ணயத்தின் பின்னரே தேர்தல் நடைபெறுமென்றும் அநுர குமர அறிவித்துள்ளார். இதுவும்கூட கொக்குக்கு தட்டில் பால் வார்த்த கதை தான்.

தேர்தல் நடக்கும் ரூபவ் நடக்காது என்ற பட்டி மன்றத்தை தொடர்ச்சி யாக்கியுள்ளது பத்து பில்லியன் ஒதுக் கீடு. இலங்கையிலுள்ள ஒன்பது மாகா ணங்களில் வடக்கில் மட்டுமே இத்தேர் தல் விவகாரம் உசுப்பேறி நிற்கிறது. மாகாண சபை என்பது மக்களுக்கானதா அல்லது கதிரைகளுக்கானதா என்ற கேள்வியும் இத னோடு எழுந்து வருகிறது.

வடமாகாண முதலமைச்சர் பதவி போட்டியில் அண்மையில் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் பெயர் ஆங் காங்கே பேசப்படுகிறது.

இவரது தந்தை தீவுப்பகுதியின் தமிழரசுத் தூண்க ளில் முக்கியமானவராக இருந்த வர். இவரது இளைய சகோதரர் தமிழர சின் மத்திய குழுவில் ஒருவர். இவரது தாய்மாமன் ஒருவர் தமிழரசு கட்சியின் முன்னாள்




தலைவர் ஒருவரின் மகளின் கணவர்.

இதற்கும் மேலாக நீதி தவறாத நேர்மையானரூபவ் துணிச்சலான ஒரு நீதிபதி என்ற புகழ் பெயருடன் இன்றும் துலங்குபவர் திரு. இளஞ்செழியன். செம்மணி கிருஷாந்தி கொலை வழக்கி லிருந்து பல நீதித் தீர்ப்பு களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அரசிய லில் இவருக்கு நாட்டம் இல்லா திருக்கலாம். ஆனால் ரூபவ் இவர் அரசிய லுக்கு பொருத்தமற்றவர் என்று கூற முடியாது.

வடமாகாண முத லமைச்சரா கவிருந்த நீதியரசர் விக் னேஸ்வரன் தன்முனைப்புடன் இயங்கியவர் என்ப தற்காகரூபவ் நீதிபதி இளஞ்செழி யனை அவருடன் ஒப்பீடு செய்வது முற்றிலும் தவறானது.

இங்கிலாந்தில் அண்மையில் இடம்பெற்ற நீதிபதி இளஞ்செழியன் பாராட்டு வைபவத்தில்ரூபவ் ரூகூ39 அடுத்த புகையிரதம் விரைவில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் ரூஙரழவ் என்ற பிரபலமான கோட்டை புகையிரத நிலைய அறிவிப்பு ரூபவ் ஓரிரு தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டது. தமது பதிலுரை யில் நீதிபதி இளஞ்செ ழியன் இதனைத் தொட்டுப் பேசிய போது திரண்டிருந்தவர்களின் கையொலி பலமாக எழுந்தது.

வடமாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கு புதியவர் ஒருவர் களமிறக்கப்படப் போகிறார் என்பதே புகையிரத சொற்றொடரின் மறைபொருள் என்று இந்நிகழ்வில் பங்குபற்றியவர்களின் விமர்சனங்களூ டாக அறிய முடிந்தது.

நல்லவர்ரூபவ் வல்லவர்ரூபவ் துணிச் சலானவர் ரூபவ் நீதிக்கு மட்டுமே தலை வணங்குபவர்ரூபவ் நீதித்து றையை நீதி யால் அலங்கரித்தவர்ரூபவ் சிங்கள ஆட்சித் தரப்பால் வஞ்சிக்கப் பட்டவர் என்ற அறிமு கத்துடன் முதல மைச்சராக ஒருவர் வரவேண்டுமென்பது காலத் தின் நியதியானால் அதனை யாரால் தடுக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்புக்கொண்டுவரப்படும்போது மாகாண சபை முறைமை நீக்கப்படும்!



## மாகாணசபைத்தேர்தல் இடம்பெறுமா? ஜேவிபி பொதுச்செயலாளர் ரில்வின் பதிலளிக்கிறார்!



-ஆர்.விதுஷா

புதிய அரசியலமைப்புக் கொண்டு வரப்படும்போது மாகாண சபை முறைமை நீக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலார் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

டான் தமிழ் ஒளியில் ஒளிபரப்பாகும் அரசியல் நிகழ்ச்சியான 'நேர்கொண்ட பார்வை' நிகழ்ச்சியில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

**கேள்வி: மாகாண சபை முறைமையை மக்கள் விடுதலை முன்னணி எதிர்த்தது. அதேநிலைப்பாட்டில் தான் உள்ளீர்களா ? அல்லது மாற்றம் உள்ளதா ?**

**பதில்:** எங்கள் கொள்கைப் பிரகடனத்தில், மாகாண சபைகள் எங்கள் நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் வெற்றியடையவில்லை என்பதை நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

ஆனால் இப்போது மாகாண சபைகள் உள்ளன. எனவே, தற்போதுள்ள மாகாண சபைகளுடன் நாங்கள் இணைந்து செயல்படப் போகிறோம். எங்கள் நாட்டின் அரசியலமைப்பை திருத்தும் நோக்கம் எங்களிடம் உள்ளது. அந்த நேரத்தில், மாகாண சபைகள் அல்ல. மாறாக உண்மையான தேசிய ஒற்றுமையை உருவாக்க கூடிய தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பிற புத்தி ஜீவிகள் இணைந்து ஒரு புதிய முன்மொழிவை கொண்டு வர வேண்டும்.

அந்த புதிய முன்மொழிவு (திருத்தங்கள்)உருவாகும் வரை, மாகாண சபைகளில் கை வைக்க மாட்டோம். மாகாண சபைகள் வெற்றியடையவில்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் அதற்கு மாற்றாகச் சிறந்த ஒன்று கொண்டு வரப்படும் வரை, இது தொடரும்.

**கேள்வி: இனப்பிரச்சினைக்கு தீர்வு புதிய அரசியலமைப்பு என கொள்கைப் பிரகடனத்தில் கூறியிருந்தீர்கள். ஆகவே புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நடவடிக்கை எந்த கட்டத்தில் உள்ளது ?**

**பதில்:** பதிய அரசியலமைப்பை உருவாக்குவது மிகவும் சிக்கலான ஒரு பணியாகும். அதை மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டியுள்ளது. எங்கள் நாட்டில் பல இனக் குழுக்கள் உள்ளன, பல்வேறு விருப்பங்கள் உள்ளன, மேலும் பல மதங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

எனவே, தற்போது நாங்கள் மேற்கொண்டு வரும் ,ந்த பணிக்காக ஒரு நிபுணரை இணைத்து ஆரம்ப வரைவு ஒன்றை தயாரிக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அதன் பின்னர், அரசியலமைப்பை உருவாக்கும் குழுவை நியமிக்க வேண்டும் அதுவே புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பொறுப்பை ஏற்கும்.

அதன் பிறகு, நாடு முழுவதும் பயணித்து, பல்வேறு குழுக்களிடமிருந்தும் நிபுணர்களிடமிருந்தும் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை சேகரித்து அதன்படி வரைவு தயாரிக்க வேண்டியுள்ளது.

இது நிச்சயமாக சில காலம் எடுத்துக் கொள்ளும். அது அத்தியாவசியமானது. பின்னர் நாங்கள் முழுமையான மற்றும் வலுவான அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்.

அதை சரியாக வரைந்து தயாரிக்க வேண்டும். தயாரித்து முடித்த பின் மக்களிடையே விவாதம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். அது நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாது, மக்களால் நடாத்தப்படும் ஒரு கருத்தெடுப்பிலும் (பொது வாக்கெடுப்பு) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அந்த நோக்கத்துடன் நாங்கள் பணியாற்றப் போகிறோம். எனவே, எதிர்காலத்தில் வழக்கமாக நாம் பரிந்துரைகளைப் பெறுவது போன்று, அறிவிக்கப்பட்ட விஷயங்களுக்கான முன்மொழிவுகளை சேகரிக்கும் பணியை ஆரம்பிக்க முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

**கேள்வி: மாகாணசபைத்தேர்தல் இடம்பெறுமா ?**

**பதில்:** நமது அரசியலமைப்பின்படி மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். இந்த ஆண்டு அது நடத்தப்படவில்லை ஏன் என்றால் பல தேர்தல்களை கடந்து வந்துள்ளோம்.

இப்போது ஒரு பிரச்சினை இருக்கிறது. ஏனெனில் இந்தத் தேர்தலைப் பற்றிச் சொன்னால், முந்தைய தேர்தல் முறைமையில் சில குறைகள் இருந்தன. பெண்களுக்கு பிரதிநிதித்துவம் தேவைப்பட்டதுடன் இளைஞர்களுக்கான பிரதிநிதித்துவமும் தேவைப்பட்டது. இவை போன்ற தேவைகளுக்காக புதிய தேர்தல் முறைமை உருவாக்க பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. அதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த தேர்தல் முறைமை உருவாக்கப்பட்டபின், பிரிவுகளை நிர்ணயிப்பதற்காக முந்தைய அரசு அதற்கென ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்தது மற்றும் எல்லை நிர்ணயப் பணிகளை மேற்கொண்டது. அதில் பல குறைகள் இருந்தன. அது ரணில் விக்ரமசிங்க பிரதமராக ,ருந்த காலத்தில் செய்யப்பட்டது. அது நாடாளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

அதை சமர்ப்பித்த நபரும் அதற்காக வாக்களித்தார், அது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதன்பின் சட்டப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டத் அது நிறைவேற்றப்பட்ட பிறகு, அது சபாநாயகரிடம் சென்று மற்றொரு குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும் அல்லது புதிய குழு நியமிக்கப்பட வேண்டும். ஆனால் இவற்றில் எதுவும் நாடாளுமன்றத்தால் செய்யப்படவில்லை.

அதனால் இப்போது அந்தச் சட்டம் சிக்கலில் சிக்கியுள்ளது. செயல்முறை நிறுத்தப்பட்டுள்ளது, மேலும் அடுத்த படிகளுக்கு செல்லும்போது அது முடங்குகிறது.

இப்போது நாம் சட்ட மா அதிபரிடம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டியிருக்கிறது. எப்படியாயினும், புதிய எல்லை நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, அது கொண்டு வரப்பட்டு, மக்களின் அங்கீகாரம் பெறப்பட்ட பிறகு தேர்தலை நடத்த வேண்டும்.

அப்படி செய்தால் எந்தத் தடைகளும் இருக்காது. நாம் முடிந்தவுடன் தேர்தலை நடத்த முடியும்.

**கேள்வி: இனப்பிரச்சினைக்கான தீர்வாக மாகாணசபை முறைமையின்றி வேறு முறைமையைதான் கொண்டுவர வேண்டும் என கூறினீர்கள் வேறு முறைமையென்றால் அந்த முறைமை எவ்வாறானதாக இருக்கும் ?**

**பதில்:** அதை இன்னும் நாம் உருவாக்கவில்லை. அதாவது, இது அனைத்து சமூகங்களுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் ஜனநாயகம், சமத்துவம், முன்னேற்றம் ஆகியவற்றை நிலைநாட்டி, குறிப்பிட்ட சமூகங்களின் கலாச்சார தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். இது ஒரு கட்சியால் மாத்திரம் உருவாக்கப்படமாட்டாது. மாறாக கலந்துரையாடலின் மூலம் இதை அடைய வேண்டும்.

எனவே, நாம் அரசியலமைப்பை தயாரிக்கும் போது, இது அதனுடைய ஒரு அங்கமாக இருக்கும். இந்த உரையாடலின் மூலம் அனைத்து சமூகங்களுக்கும் ஏற்றவாறு ஒன்றை உருவாக்க வேண்டும். இங்கு ஒரு பெரிய சவால் உள்ளது. நாம் முன்வைக்கும் எந்த முன்மொழிவிற்கும் ஒரு சமூகமேனும் எதிர்ப்பு தெரிவித்தால், அதை நடைமுறைப்படுத்த முடியாது. அதை முன்னெடுத்தாலும், அவர்களின் எதிர்ப்பை புறக்கணிக்க முடியாது. ஆகையால், நமது பணி பிரச்சினைகளைத் தீர்த்து, அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு முன்மொழிவை உருவாக்குவதாகும். இது சிக்கலானதும் கடினமானதுமான பணியாகும், ஆனால் நாம் அதைக் கவனமாகச் செய்ய வேண்டும்.

இதனை அடைவது நமது நாட்டின் புத்திஜீவினகளின் விளைவாகும், மேலும் அதற்கான ஒரு வாய்ப்பை வழங்க தயாராகவுள்ளோம்.

**கேள்வி: அபிவிருத்தி திட்டம் என வரும் போது அரசாங்கம் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தை மையமாக கொண்டே அதிகளவு திட்டங்களை முன்னெடுப்பதன் குற்றச்சாட்டுக்களை மன்னார் மக்கள் பிரதிநிதிகள் முன்வைக்கின்றனர். ஏன் மன்னார் வவுனியா கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களை புறந்தள்ளுகின்றீர்கள். உண்மையில் அத்தனைய நிலை தான் காணப்படுகின்றதா?**

**பதில்:** நீங்கள் சொல்வதில் உண்மையும் உள்ளது. அபிவிருத்தி திட்டங்கள் என்று வரும் போது யாழ்பாணமே அடித்தளமாக உள்ளது. ஆனால் இப்போது அதை மாற்றுவதற்கான முயற்சியை நாம் ஆரம்பித்துள்ளோம். அதாவது நாம் பிரஜா சக்தி திட்டங்களை உருவாக்கும் போது நாடு முழுவதும் ஒவ்வொரு மூலையிலும் ஒரு எடுத்துக்காட்டை கொண்டு செல்கிறோம். அந்த திட்டங்களை மன்னார் வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். அதேபோல் இப்போது நாம் ஒரு வீட்டு திட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளோம். அது எல்லா ,டங்களுக்கும் பொருந்தக்கூடியது. ஆனால் கடந்த காலத்தில் பிற இடங்களை ஒப்பிடும்போது யாழ்ப்பாணம் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். அது உண்மைதான், அப்படி நடந்தது. அதை நாம் சரிசெய்வோம்.

**கேள்வி: செம்மணி மனிதபுதைகுழி விடயத்தில் இந்த அரசாங்கத்தின் ஆட்சியிலேனும் நீதி கிடைக்கப் பெறும் என நம்பலாமா ?**

**பதில்:** நாம் இப்போது இந்தப் பணியை ஆரம்பித்துள்ளோம். இவை மிகவும் நுணுக்கமானதும் சிக்கலானதுமான பிரச்சினைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவை இலகுவான விடயங்கள் அல்ல. காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் இருக்கிறது ஆனால் அது செயலில் இல்லை. இப்போது நாங்கள் பல புதிய பணியாளர்களை நியமித்து அந்தப் பணிகளை முன்னெடுத்து வருகிறோம். அந்த விவகாரங்களில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதேபோன்ற பிற பிரச்சினைகளையும் நாங்கள் கையாள முடியும் மனித புதைகுழி தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன. இவற்றை நாங்கள் விதிமுறைகளுக்குட்பட்டு கையாளுகிறோம். இந்தப் பணியை மேற்கொள்ளப் போவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கும் தெரிவித்தோம். அது தற்போது நடைமுறையில் உள்ளது. ஏனெனில் இது மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டிய ஒன்று மேலும் இவை போன்ற பிரச்சினைகளுக்கு நாம் உணர்வுபூர்வமாக அணுகுகிறோம் என்பதால் அதை மிகுந்த எச்சரிக்கையுடன் மேற்கொள்கிறோம்.

நாங்கள் ஒரு உத்தரவாதத்தை வழங்க முடியும் இதை நாம் கைவிடமாட்டோம் அல்லது நடுவே நிறுத்த மாட்டோம். இந்த விடயத்தில் நாங்கள் ஒரு வாக்குறுதி அளித்துள்ளோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் அந்த பணிகளை மேற்கொள்வோம்.

**கேள்வி: செம்மணி மனித புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் ,ந்த அரசாங்கத்தின் உயர் பதவிகளில் இருப்பதான குற்றச்சாட்டு உள்ளது. அதற்கு உங்களுடைய பதில் என்ன?**

**பதில்:** வாய்வழி குற்றச்சாட்டுகளைச் செய்யலாம். ஆனால் நாங்கள் விசாரணைகளை நடத்தி வருகிறோம். அதேபோன்று

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமும் சிறுத்து சனமும் சிறுத்து...?

-நிலாந்தன்

சில ஆண்டுகளுக்கு முன் யாழ்பா ணத் தில் உள்ள சர்வோதயம் நிலையத் தில் பெண்களுக்கான ஒரு சந்திப்பு இடம் பெற்றது. மொத்தமாக 50க்கும் குறை யாத பெண்கள் வந்திருந்தார்கள். அதில் அநேகமானவர்கள் நடுத்தர வய தைக் கடந்த குடும்பப் பெண்கள். அவர் களி டம் நான் ஒரு கேள்விகேட்டேன். “நீங்கள் எத்தனை சகோதரர்களோடு பிறந்தீர்கள்?ரூஙரழவ் என்று.

அவர்களில்பெரும்பாலானவர்கள் ூன்றுக்கும் மேற்பட்ட சகோதரர்க ளோடு பிறந்தி ருக்கிறார்கள்.

நான்கு பெண்கள் மட்டும் இரண்டு அல்லது ஒரு சகோதரம் அல்லது தனிப் பிள்ளை. அவர்களிடம்

மீண்டும் கேட்டேன். “உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?ரூஙரழவ் அவர்களில் ூன்று பேர்களுக்கு

மட்டும்தான் ூன்றுக்கும் அதிகமான பிள்ளைகள். ஏனைய அனைவருக்குமே இரண்டு அல்லது ஒரு பிள்ளைதான்.

இது நடந்தது சில ஆண்டுகளுக்கு முன்பு.இப்பொழுது சனத்தொகைக் கணக்கெடுப்பு வந்திருக்கிறது.

அதில் தமிழ்மக்களின் குடித்தொகை குறைந்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த கணக்கெடுப்பு நடக்க முன்னரே ஜனத்தொகை குறைகிறது என்பது பொதுவாக உணரப்பட்ட ஒரு விடயம்.

நகரப்புறங்களுக்கு வெளியே உட் கிராமங்களில் ஆளற்ற வீடுகளை அதிக மாகக் காணமுடியும். இவை

இரண்டு விதமானவை. ஒன்று உரி மைகோர யாருமில்லாத அல்லது உரி மைகோர வேண்டியவர்கள் புலம் பெயர்ந்துவிட்ட பாழடைந்த வீடுகள். மற்றது புலம்பெயர்ந்த தமிழர் கள் தாயகத்துக்குத் திரும்பிவந்து புதி தாகக் கட்டிய அல்லது புனரமைத்த பிரம் மாண்டமான வீடுகள்.

நான் இருக்கும் வீதியில் மட்டும் கிட்டத்தட்ட ஒன்றரை கிலோ மீட்டர் இடைவெளிக்குள் நாலுக்கும்

குறையாத ஆளில்லாத வீடுகள் உண்டு. அந்த வீடுகளில் வசித்தவர்கள் அல்லது வசிக்க வேண்டியவர்கள்

எங்கே? தமிழ் மக்கள் மத்தியில் குடித் தொகை குறையக்குறைய ஆளில்லா வீடுகளின்எண்ணிக்கையும் அதிகரித்து செல்கிறது. அதேசமயம் வீடில்லாத அல்லது சொந்தமாகக் காணியில்லாத ஒரு தொகுதி மக்களும் உண்டு.

தமிழ்ச் சூகத்தில் சனத்தொகை குறைவதற்கு பின்வரும் காரணங்கள் உண்டு. முதலாவதும் முக்கியமான துமான காரணம் போர். போர் லட்சக் கணக்கான மக்களைத் தின்றுவிட்டது அதேசமயம் லட்சக்கணக்கான மக்க ளைத் தாயகத்தில் இருந்து வேரைப் பிடுங்கி எறிந்து விட்டது.


போர் காரணமாக ஏற்பட்ட தொடர்ச்சியான இடப்பெயர்களும் புலப்பெயர்ச்சியும் மகப்பேற்று விகி தத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு பாதித் திருக்கின்றன. இரண்டாவது காரணம் பெண்கள் வயது பிந்தித் திருமணம் செய்வது.

இதில் போரின் விளைவாக நேரடியா கவே தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டார்கள் அல்லது சந்ததி விருத்தி செய்ய முடியா தவர்களாகச் சிதைக்கப்பட்டார்கள்.

அதனால் சனத்தொகை குறைந்தது. இன்றுவரையிலும் போரில் கொல்லப் பட்டவர்களின் மொத்தத்

தொகை என்ன என்பது தெரியாத ஒரு மக்கள் கூட்டம் நாங்கள். டிஜிட்டல் யுகம் என்று கூறுகிறோம்.

ஆனால் பிரான்சிஸ் ஹரிசன் கூறு வதுபோலரூபவ் இப்பொழுதும் இறந்த வர்களை எண்ணிக் கொண்டிருக்கி றோம். 16 ஆண்டுகள் ஆன பின்னும்.



**“போரில் கொல்லப்பட்டவர்களின் மொத்தத் தொகை எவ்வளவு? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொகை எவ்வளவு? புலம்பெயர்ந்து போனவர்களின் தொகை எவ்வளவு? போன்ற விவரங்களை ஒரு மையத்திலிருந்து தொகுப்பதற்கு தமிழ்மக்கள் மத்தியில் யார் உண்டு?**

**அதுபோலவே சனத்தொகை வளர்ச்சி குறைகிறது என்றால் அதுதொடர்பில் ஆராய்வதுரூபவ் நடவடிக்கை எடுப்பது யார்?”**

போர் நேரடியாகவே உயிர்களைத் தின்றது. அதேசமயம் போர்ச் சூழலுக் குள் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் பிள்ளைப்பேறு விகிதத்தைப் பாதித்தன. தன்னுடையதல்லாத வீட்டில்ரூபவ் ஒட்டு

வீட்டில்ரூபவ் சிறிய வீட்டில்ரூபவ் சந்தோஷமாக வாழ முடியாத ஒரு தொகுதி குடும்பங்கள் பிள்ளைப் பெறு வதை தவிர்த்தன. தொடர்ச்சியான இடப் பெயர்வுகளை எதிர்நோக்கிய குடும்பங் கள் அதிகம் பிள்ளைகள் பெற்றுக் கொள் வதைத் தவிர்த்தன.

இதுவும் மறைமுக மாக மகப்பேற்று விகிதத்தைப் பாதித்தது.அடுத்த முக்கிய காரணம் புலப்பெயர்ச்சி. அது போரின் நேரடி விளைவு. புலப்பெயர்ச்சிநேரடி யாக தாயகத்திலிருந்து ஒரு பெரிய சனத் தொகையை அகற்றியிருக்கிறது.

இதுவரையிலும் ூன்று புலப்பெ யர்ச்சி அலைகள் ஏற்பட்டுள்ளன. முத லாவதுரூபவ் 1983க்கு முந்தியது. இரண் டாவதுரூபவ் 1983 ஜூலையோடு தொடங்கிய போர்க்காலப் புலப்பெ யர்ச்சி. இதுதான் பெரியது.

ூன்றாவதுரூபவ் கடந்த பொருளா தார நெருக்கடியின்போது ஏற்பட்டு ரூபவ் இப்பொழுது வரை நடந்து கொண்டிருப்பது. இந்த ூன்று புலப் பெயர்ச்சி அலைகளின் போதும் மொத் தம் ூன்றில் ஒரு பகுதி சனத் தொகை ரூபவ் குறிப்பாக வம்சவிருத்தி செய்யும் வயதுடையோர் புலம்பெயர்ந்து வருகி றார்கள்.

இதுவரை மொத்த ஜனத்தொகையில் ூன்றில் ஒரு பகுதி புலம்பெயர்ந்து விட்டதாக

உத்தியோகப்பற்றற்ற கணக்குகள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பாக உத்தியோகபூர்வமான புள்ளிவிவரங்கள் இல்லை. ஒரு மையத்திலிருந்து அவ்வா றான புள்ளிவிபரங்களைத் திரட்ட வேண்டியது யாருடைய பொறுப்பு? இதை மறுவளமாகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

புலம்பெயர்ந்த நாடுகளிலும் மகப்பேற்று விகிதம் திருப்தியாக இல்லை. குறிப்பாக முதலாம்

தலைமுறை புலம்பெயரிகளை பொறுத்தவரை அவர்கள் அதிகமதிகம் ரூடவ்ருடக வாசிகள். புலம்பெயர்ந்த

நாடுகளில் கிடைக்கக்கூடிய வீடுக ளின் அளவுரூபவ் அறைகளின் அளவு ரூபவ் அங்கே எந்தளவுக்கு

செற்றில்ட் ஆகியிருக்கிறார்கள் போன்ற எல்லா அம்சங்களும் மகப் பேற்று விகிதத்தைத் தீர்மானிக்கின்றன.

ஒருபுறம் புலப்பெயர்ச்சி ஜனத்தொ கையைத் தாயகத்தில் இருந்து அகற்றி யுள்ளது.

இன்னொருபுறம் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் குறிப்பாக முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகள் மத்தியில் மகப்பேற்று விகிதம் ஒப்பீட்டுளவில் திருப்தியாக இல்லை.

இவைதவிரரூபவ் தாயகத்தில் மற்றொரு அம்சமும் ஜனத்தொகைப் பெருக்கத்தைப் பாதிக்கின்றது.

காலத்தால் பிந்திய திருமணங்கள். இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின் றன. முதலாவது காரணம்ரூபவ்

பெண் பிள்ளைகள் படிப்புரூபவ் தொழில் காரணமாக திருமணத்தை ஒத்திவைப்பது. இரண்டாவது காரணம்

சீதனம். ூன்றாவது காரணம் மேற்சொன்ன இரண்டு காரணங்களின் விளைவாக வயது சென்று

கர்ப்பம் தரிக்கும்போது இயற்கை யான பிரசவத்தை விரும்பாமல் சிசே ரியன் அறுவைச் சிகிச்சைூலம் பிள்ளை களைப் பெற்றுக்கொள்ள விரும்புவது. குறிப்பாக படித்த பெண்கள்ரூபவ்

வசதியான பெண்கள் இந்தப் பிரிவுக் குள் வருகிறார்கள். உடற்பயிற்சியின் மைரூபவ் ஓரிடத்திலேயே தொடர்ச் சியாக இருந்து வேலைசெய்வதுரூபவ் முன்பு உடலை அசைத்துச் செய்த வேலைகளுக்கு இப்பொழுது இயந்தி ரங்கள் கிடைத்திருப்பது. அதனாலும் உடற்பயிற்சிக்கு நிகரான வீட்டு

வேலைகளைச் செய்வது குறைந்து விட்டமை. இவைதவிர அதீத மருத்துவ அக்கறையும் ஒரு காரணம் என்று மருத் துவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

படித்த குடும்பங்களில் பிள்ளை கருத்தரிக்கும் போதே பெற்றோர் ஒரு மருத்துவ நிபுணரிடம் போய் விடுகிறார் கள்.

அங்கிருந்து தொடங்கி மருத்துவ நிபுணரின் வழிகாட்டுதலின் கீழ் பிள்ளை யும் ஆரோக்கியமாக வளர்கிறது. தாயும் ஆரோக்கியமாக இருக்கிறார். அதேசம யம்அதீத கவனிப்பின் காரணமாக சில பிள்ளைகள் பெரிதாக வளர்கின்றன.

அதனால் இயற்கையாக அந்த பிள் ளைகளைப் பிரசவிப்பது வலி மிகுந்தது என்று கருதும் படித்த பெண்கள்ரூபவ் வசதி யான பெண்கள் சத்திரசிகிச்சையை நாடுகிறார்கள் என்றும் மருத்தவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

தவிர

மருத்துவர்களிலும் சிலர் சிசேரியனை ஊக்குவிப்பதாகக் கூறப்படுகின்றது. இவைபோன்ற பல காரணங்களினாலும் சிசேரியனை நாடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவ்வாறு

சிஸேரியன் ூலம் பிள்ளையைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் ஆகக்கூ டியது ூன்று பிள்ளைகளைத்தான் பெற லாம். இது வும் மகப்பேற்று விகிதத்தை வரைய றைக்கு உள்ளாக்குகிறது.

இவ்வாறு மேற்கொண்ட பல்வேறு காரணங்களின் விளைவாகவும் மகப் பேற்று வீதம் குறையும்போது இயல்பா கவே அது சனத்தொகையை பாதிக்கும். ஏற்கனவே யுத்தம் கிட்டத்தட்ட 3லட்சம்

பேரைத் தின்றுவிட்டது. ஒருபுறம் சனத்தொகை இழப்பு. இன்னொருபுறம் மகப்பேற்று விகிதம் குறைவு. இவற்றின் விளைவாக ரூடவ்ழத்தமிழர்கள் மத்தி யில் கடந்த சில தசாப்தங்களாக சனத் தொகை வளர்ச்சி பெருமளவுக்குக் குறைந்துவருகிறது.

அரசறிவியல் விளக்கத்தின்படி ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் ஐந்து. நிலம்ரூபவ்இனம்ரூபவ் மொழிரூபவ் பொதுப் பொருளாதா ரம்ரூபவ் பொதுப் பண்பாடு ஆகிய ஐந்துமே அவை. இதில் இனம் எனப்படுவது இன்னொரு விதத்தில் சனத்தொகைதான். ஒருபுறம் நிலப்பறிப்பு வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது. இன்னொருபுறம் சனத்தொகையும் குறைகின்றது. இவ்வாறு நிலமும்

சிறுத்துரூபவ் சனமும் சிறுத்துக் கொண்டே போனால் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசிய இன மாகத் தக்கவைப்பது மேலும் சவால்க ளுக்கு உள்ளாகலாம்.

அண்மையில் குடித்தொகைக் கணக் கீடு வெளிவந்த பின் எத்தனை அரசியல் கட்சிகள் அதுதொடர்பாக தமது அக்க றையை வெளிப்படுத்தியி ருக்கின்றன? ஒரு மக்கள் கூட்டத்தின் சனத்தொகை வளர்ச்சியைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதும் முகாமை செய்ய வேண் டியதும் அரசியல் தலைமைத்துவத்தின் பொறுப்புகளில் ஒன்று. ஜனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பும் அரசுடையது.

அதுபோலவே சனத்தொகை வளர்ச்சி விகிதத்தை ஒரு குறிப்பிட்ட எல்லையில் பேண வேண்டியதும் அரசுடைய பொறுப்புத் தான். சீனா இந்தியா போன்ற நாடுகள் கடந்த நூ ற்றாண்டுகளில் அதைச் செய்தி ருக்கின்றன. அவ்வாறான நாடுகளில் சனத்தொகைப் பெருக்கத்தை

கட்டுப்படுத்துவதற்கும் சனத்தொ கைப் பெருக்கத்தை வேகப்படுத்துவ தற்கும் அரசின் ஊக்குவிப்பு கிடைத்தது.

ரூடவ்ழத் தமிழர்கள் அரசற்ற ஒரு மக்கள் கூட்டம். தமது சனத்தொகை தொடர்பாக பொருத்தமான முடிவுகளை

எடுப்பதற்கு ரூடவ்ழத் தமிழர்கள் மத் தியில் யார் உண்டு? போரில் கொல்லப் பட்டவர்களின் மொத்தத் தொகை எவ்வ ளவு? காணாமல் ஆக்கப்பட்டவர் களின் தொகை எவ்வளவு? புலம் பெயர்ந்து

போனவர்களின் தொகை எவ்வளவு? போன்ற விவரங்களை ஒரு மையத்திலி ருந்து தொகுப்பதற்கு தமிழ்மக்கள் மத்தியில் யார் உண்டு? அதுபோலவே சனத்தொகை வளர்ச்சி குறைகிறது என்றால் அதுதொடர்பில் ஆராய்வது ரூபவ் நடவடிக்கை எடுப்பது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் நீதிபதியும் முதலமைச்சர் பதவியும்!

- கந்தையா அருந்தவபாலன்

"அவளை ,ன்னும் காணவில்லை அதுக்குள்ள பிள்ளைக்கணக்கு" என்றொரு சொல்லாடல் முன்னர்

ஊர்மக்களின் வழக்கத்திலிருந்தது. திருமணத்துக்குப் பெண் கிடைக்குமுன் எத்தனை பிள்ளைகள் பெறுவது

என்று கற்பனை செய்வது என்பது அச்சொல்லாடலின் கருத்து. அது போலத்தான் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கும் என்பதற்கான எந்தவொரு உறுதியான வெளிப்பாடுகளும் இல்லாத நிலையில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சருக்கான போட்டிகள் கட்சிகளிலும் ஊடகங்களிலும் தொடங்கிவிட்டன. அதனால் மக்கள் மத்தியிலும் இது தொடர்பான கருத்தாடல்களும் இப்போது

அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. மாகாணசபைத் தேர்தல்கள் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறக் கூடும் என அரசாங்க உறுப்பினர்கள் சிலர் கடந்த ஜனவரி மாதம் தெரிவித்த போதே இக்கருத்தாடல்கள் தொடங்கி விட்டா லும் பின்னர் அது அடங்கி இப்போது மீண்டும் வீறுநடை போடத் தொடங் கிவிட்டன. தற்போது அது கூடியளவு பேசுபொருளானதற்கான பிரதான காரணம் முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்

அவர்களின் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணமும் அங்கு அவரின் வெளிப்பாடுகளும் எனலாம்.

இளஞ்செழியன் அவர்களின் பிறந்த ஊர் வேலணையாகும். பிரித்தானியாவில் வாழ்ந்துவரும் அவ்வூரைச்சேர்ந்த சிலரால் அவரது நீதிச்சேவையை கௌரவிக்கும் முகமாக விழாவொன்று

அண்மையில் லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்விழாவில் உரையாற்றிய இளஞ்செழியன் அவர்கள் தனக்கு பதவியுயர்வு தரப்படாததையிட்டு கருத்துக்களைத் தெரிவித்ததுடன்

அதற்காக ஒருகட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு கண்கலங்கியதையும் அவதானிக்க முடிந்தது. ஏலவேபிரதான தமிழ் அரசியல் கட்சிகளின் மாகாணசபைத் தேர்தலுக்கான கோரிக்கைகள்ரூபவ் பரப்புரைகள் ஒருபுறமும் மறுபுறத்தில் கருத்துருவாக்கிகள் சிலரின் பொது வேட்பாளர் என்ற கருத்துரைகளும்

அரங்கேறிவரும் சமகாலத்தில் குறித்த சில அரசியல் தரப்பினர் இளஞ்செழியனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கான முயற்சிகள் பற்றிய அரசல்புரசலான கதைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இளஞ்செழியனும் முதலைமைச்சர் வேட்பாளரும் என்ற கோணத்தில் சமூக ஊடகங்களில் மட்டுமன்றி அச்சு ஊடகங்களிலும் அது பேசுபொருளாக மாறியுள்ளது.

முதலில் இளஞ்செழியன் அவர்கள் பதவியுயர்வின்றி ஓய்வுபெற்றமை தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் பற்றி விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். தனக்கு பதவியுயர்வு

கிடைக்காமைக்கு விதியா அல்லது சதியா காரணம் என்று வெளிப்படையாகக் கூறாவிடினும் அவரது கருத்துகளிலிருந்து அவருக்குப் பதவியுயர்வு வழங்குவது திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கருத முடியும். ஏனெனில் இளஞ்செழியன் அவர்களது அறுபத்தியொரு வயது நிறைவு நாளும்

ஜனாதிபதியின் சீன நாட்டுக்கான பயணமும் சமகாலத்தில் நிகழ்ந்த ஒன்று என்ற காரணத்தால்

அது தவறுதலாக நடந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. அவ்வாறானால் அது விதி. ஆனால் இது போன்ற விடயங்கள் அவ்வாறு எழுந்தமான வகையில் தீர்மானஞ் செய்யப்படும் ஒன்றல்ல.

இவ்வாறான விடயங்கள் முன்னராகவே நீதிச்சேவை ஆணைக்குழுவினாலும் ஜனாதிபதியினாலும் அரசமைப்புப் பேரவையினாலும் கவனிக்கப்பட்டிருக்க வேண்டிய விடயம். அதற்கு மேலாக இது

தொடர்பாக நான்கு கடிதங்கள் இளஞ்செழியன் அவர்களால் ஜனாதிபதிக்கு எழுதப்பட்டுள்ளபோதும்

இதுவரை அதற்கான எந்தவொரு



> "இளஞ்செழியன் அவர்கள் தேர்தல் அரசியல் சேற்றில் கால்வைக்கக் கூடாது என்பதே அரசியல் சார்பற்றவர்களதும்ரூபவ் அவரை நேசிப்பவர்களதும் பொதுக்கருத்தாகக்காணப்படுகிறது. முதலமைச்சர் பதவிக்கு அவர் பொருத்தமானவரா இல்லையா என்பதற்கப்பால் இன்றைய தமிழ் அரசியல் சூழ்நிலையில் அவர் அதில் கால்வைத்தால் மக்கள் மத்தியில் அவர் ரூடவ்ட்டி வைத்திருக்கும் பெருமதிப்புக்கு பங்கமேற்படும் என்பதை உறுதியாகக் கூறமுடியும்."

பிரதிபலிப்பும் ஜனாதிபதியிடமிருந்து அவருக்குக் கிடைக்கவில்லை.ஒன்றில் அது தவறானாதாக இருந்திருப்பின் அதனைச் சீர்செய்வதற்கான ஏற்பாடுகள்

ஜனாதிபதியால் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். அல்லது அவருக்கு பதவியுயர்வு வழங்கப்படா மைக்கான காரணங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கவேண்டும். அதனை அறிந்து கொள்வதற்கான உரிமை நீதிபதி

என்ற வகையில் மட்டுமன்றி இந்நாட்டின் குடிமகன் என்ற வகையிலும் அவருக்குண்டு.

அதேவேளை இளஞ்செழியன் அவர்டிகளுக்கு அவர் எதிர்பார்த்ததைப்போல பதவியுயர்வு கட்டாயம்

வழங்கப்படவேண்டிய ஒன்றா? அவர்கூறுவது போல விருப்பின்றிக் கட்டாய ஓய்வுக்கு அவர் தள்ளப்பட்டாரா போன்றனவும் ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும். இலங்கையில் சிலசிறப்புத் தொழில் வாண்மையுள்ளவர்களைத் தவிர அரச பணியாளர் ஒருவர் ஓய்வு பெறவேண்டிய

உச்ச வயதெல்லை அறுபது வருடங்களா கும். ஆனால் வைத்திய நிபுணர்கள்ரூபவ் நீதிபதிகள் போன்ற

சிலரின் ஓய்வுக்குரிய வயது அறுபத்தைந்துவரை நீடிக்கப்படும் வாய்ப்புகளுண்டு. இலங்கை

நீதிமன்றக் கட்டமைப்பில் ஏறுவரிசை நிலையில் மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் தொடங்கி மேல்நீதிமன்றம்ரூபவ்மேன்முறையீட்டு நீதிமன்றம் உச்சநீதிமன்றம் என்றவகையிலான படிமுறை காணப்படுகின்றது. அதற்கேற்ப அந்நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வுபெறுவதற்கான உச்ச வயதும் அமைகிறது.

அந்தவகையில் மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள் 60 வயதிலும் மேல்நீதிமன்ற நீதிபதிகள் 61 வயதிலும் மேன்முறையீட்டு நீதிபதிகள் 63 வயதிலும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் 65 வயதிலும் ஓய்வுபெறவேண்டும். இதற்கமைய ஒரு படிநிலையில்

உள்ள நீதிபதி ஒருவர் ஓய்வுபெறுவதற்கான உச்ச வயதை அடையுமுன் அடுத்த நிலைக்கு பதவியுர்வுபெற்றால் மட்டுமே அவரது ஓய்வு பெறுவதற்கான வயது உயரும். இல்லையெனில் குறித்த

வயதெல்லையில் அவர் ஓய்வு பெற வேண்டும். இவ்வகையில் இது பதவியுயர்வுடன் இணைந்த பணிநீடிப்பு எனலாம்.

இளஞ்செழியன் அவர்கள் மேல்நீதிமன்ற நீதிபதி என்றவகையில் அவருக்கு 61 வயது நிறைவடையமுன் மேன்முறையீட்டு நீதிபதியாக பதவியுயர்வு வழங்கப்படாமையானால் ஓய்வு பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. பதவியுயர்வு கட்டாயமானதா என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

பதவியுயர்வு பெறுவதற்கு உச்சமாகப் பத்தொன்பது நீதிபதிகளைக்கொண்டிருக்கவேண்டிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வெற்றிடம் ,ருக்கவேண்டும் என்பதுடன் அது நீதிச்சேவை

ஆணைக்குழுவின் விதப்புரைரூபவ் ஜனாதிபதியின் விருப்பம்ரூபவ் அரசமைப்பேரவையின் ஒப்புதல்

போன்ற காரணிகளில் தங்கியுள்ள விடயமாக உள்ளது. இளஞ்செழியன் போன்று ஒரு நீதிபதி பதவியுயர்வை எதிர்பார்த்தாலும் அல்லது பொதுக்கருத்து இருந்தாலும்கூட மேற்குறித்த ரூன்று அமைப்புகள் ஒருமுகப்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும். ,வற்றுள் எங்கு அதற்குத் தடை ஏற்பட்டது என்பது தெரியாது. அதேபோல ,னவாத நோக்கில்தான் அவருக்குப் பதவியுயர்வு

வழங்கப்படவில்லை என்பதையும் உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் இதற்கு முன்னரும் பலநீதிபதிகள் இவ்வாறு பதவியுயர்வின்றி ஓய்வு பெற்றுள்ளார்கள். அதேபோன்று

இளஞ்செழியன் போன்று ,ன்னொரு முஸ்லிம் நீதிபதியும் ஓய்வுபெறவேண்டி ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் தற்போது இன்னொரு மேல்நீதிமன்ற தமிழ்

நீதிபதியான அன்னலிங்கம் பிரேம் சங்கருக்கு மேன்முறையீட்டு நீதிபதி உயர்வு

வழங்கப்பட்டிருப்பதுடன் தற்போது பிரதம நீதியரசர் வெளிநாடு சென்றதன் காரணமாக பதில்பிரதம நீதியரசராக உச்ச நீதிமன்ற தமிழ் நீதிபதி துரைராஜா அவர்கள்நியமிக்கப்பட்டுள்ளார். இளஞ்செழியனின் கருத்துப்படி மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு

நான்கு வெற்றிடங்கள் ,ருந்தன என்றும் பதவியுயர்வுக்கான பட்டியலில் அவரே ரூத்தவர் என்றும் காணப்படுவதால் அவருக்குப் பதவியுயர்வு வழங்கப்படாமைக்கு வேறு காரணங்கள்

இருக்கக்கூடும் என்ற கருத்துகளையும் நாம் நிராகரிக்க முடியாது. இவ்விடயங்கள் மட்டுமன்றி இதற்குப் பின்னால் இருந்திருக்கக்கூடிய வேறு விடயங்களும இளஞ்செழியன் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அப்படியிருந்தும் கிட்டத்தட்ட பத்துமாதங்கள்

கடந்துவிட்ட நிலையில் புலம்பெயர் அரங்கில் மீண்டும் இதுதொடர்பாக கண்ணீருடன் கருத்துரைக்க முயன்றமைதான் அவர் தொடர்பில் பல்வேறு கேள்விகளையும் விமர்சனங்களையும்

தோற்றுவித்துள்ளன. மக்கள் மத்தியில் அனுதாபத்தைத் தேடுவதன்ரூலம் முதலமைச்சர் வேட்பாளருக்கான மக்கள் ஆதரவைப் பெற விழைகிறாரா என்ற கேள்வியையும் அது எழுப்பியுள்ளது. இதுதொடர்பான அவரது நிலைப்பாடுரூபவ்அவரைச்சாரந்தவர்களின் நிலைப்பாடுரூபவ் அரசியல்கட்சிகளின் நிலைப்பாடுரூபவ்மக்களின் கருத்துக்கள் எவ்வாறுள்ளன? இளஞ்செழியன் அவர்கள் அரசியலுக்குப் புதியவரல்லர். அவரது குடும்பம் தமிழ் அரசியலுடன்

நெருக்கமானதொன்று என்பதற்கப்பால் தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் உடையது. அவரது

தந்தையார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியமான செயற்பாட்டாளராக நீண்டகாலமாகச்செயற்பட்டவர். அதேபோல அவரது இளைய சகோதரன் விடுதலைப் போராட்டத்துடன் தன்னை

ரூடவ்டுபடுத்திக் கொண்டவர் என்பதுடன் தற்போதும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராக இருந்து வருகிறார். இளஞ்செழியன் அவர்கள் தன்பணி காரணமாக நேரடியான அரசியலில் ரூடவ்டுபடமுடியாவிடினும் இனப்பற்று மிகுந்த ஒருவர் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இதனால் தற்போது அவர் அரசியலில் கௌரவமான பதவியொன்றை அடை வதற்கு அவர் உள்ரூர விருப்பத்தைக் கொண்டிருக்கக் கூடும். அது தவறான விடயமுமன்று. அவ்வாறில்லாவிட்டாலும் அவரைச்

சார்ந்தவர்களுக்கு அவ்வாறான எண்ணமுண்டு என அறியமுடிகிறது. அதைவிட அவர் விரும்பாவிட்டாலும் அரசியல் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் அவருக்கு தூண்டில்போடும் முயற்சிகளில் இறங்கியுள்ளன போலத் தெரிகிறது. நீதிபதி என்றாலும்

அவரும் ஆசாபாசங்கள் கொண்ட மனிதன்தானே.மறுபுறத்தில் தமிழரசியல் கட்சிகள் துண்டு துண்டாக சிதறியிருப்பதுடன் இவற்றுள் பெரிய கட்சி என்று கருதப்படும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் உட்கட்சிப் பூசல்களால் நாளுக்குநாள் பலமிழந்து வருகிறது. ,க்கட்சிகள் எதிலும் இன்றைய நிலையில் மக்களால் விரும்பி ஏற்கக்கூடிய முதலமைச்சர் வேட்பாளர் ஒருவர் கிடையாது. மறுபுறத்தில் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் நாளுக்கு நாள் தன்னை பலப்படுத்திக் கொண்டு வருவதையும் காணமுடிகிறது. ,ந்நிலையில் தமிழ்க்

கட்சிகளின் ,யலாமையும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் மக்களாலும் கட்சிகளாலும்ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதுமகனைத் தேடவேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்த இடத்தில்தான்இளஞ்செழியன் போன்றவர்கள் அபயம் கொடுப்பவர் போல முன்வந்து நிற்கிறார்கள்.

அவ்வாறு இளஞ்செழியன் அணுகப்படுவாரானால் அவர் எந்தக் கட்சியினால் தத்தெடுக்கப்படுவார் அல்லது எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படுவாரா என்பதை எதிர்காலந்தான்

தீர்மானிக்க வேண்டும். எல்லாத்தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு நிலையில்தான்அவர் அதற்குஇணக்கம் தெரிவிக்கக்கூடும்.

தற்போதைய நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சிலர்இந்த முயற்சியில்,றங்கியுள்ளதாகச் சில உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன. அக்கட்சிக்கும்

அவ்வாறான ஒரு தேவை ,ருப்பது போலத்தெரிகிறது. அக்கட்சி நீண்டகாலமாகக் கடைப்பிடித்துவந்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மாளிகையை அதிர வைத்த நியூயார்க் புதிய மேயர் மம்தானியின் வெற்றி! டிரம்ப் அரசுடன் இணைந்து பயணிப்பாரா ?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்காவின் நியூயார்க் நகரின் 111வது மேயராக, 34 வயதே ஆன ஜோஹ்ரன் மம்தானி (Zohran Mam dani) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், முன்னாள் ஆளுநர் ஆண்ட்ரூ கியூ மோவை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துள்ள ஜோஹ்ரன் மம்தானி ஒக்ரோபர் 18, 1991இல் உகண்டாவின் கம்பாலா நகரில் இந்திய - முஸ்லிம் பின்னணி கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். தனது ஏழாவது வயதிலேயே நியூயோர்க்கிற்குக் குடிபெயர்ந்தவர்.இந்தியாவின் சினிமாத் திரைப்பட இயக்குநராகிய மீரா நாயரது மகனான மம்தானியின் தந்தையார் மஹ்மூட் மம்தானி கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியர்.

இவ்வாறான புலம்பெயர் பின்னணி கொண்ட அவர் அமெரிக்காவின் மிக முக்கிய நபராகமாறியிருக்கிறார். ஆம் நியூயோர்க் பெருநகரத்தின் முதல்வர் பதவியை வென்று தனதாக்கியுள்ளார்.

நியூயோர்க் எப்போதும் புலம் பெயர்ந்தோரது நகரமாக இருந்து வருகிறது. அது புலம் பெயர்ந்தவர்க ளால் கட்டியெழுப்பப்பட்ட நகரம். புலம்பெயர்ந்தவர்களால் இயக்கப்படுகின்ற நகரம்.

இன்றிரவுடன் அது புலம்பெயர் வாசி ஒருவரது தலைமையின் கீழ் வந்துள்ள நகரம் என தனது வெற்றி உரையில் பெருமையாகக் கூறியிருக்கிறார் ஜோஹ்ரன் மம்தானி.8.5 மில்லியன் மக்கள் வசிக்கின்ற நியூயோர்க் நகரத்தின் மேயர் தேர்தல் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் நடைபெற்று முடிந்துள்ளது. அதில் ஜனநாயகக் கட்சியின் சார்பில்போட்டியிட்ட மம்டானியை நியூயோர்க் வாசிகள் தங்களது அடுத்த முதல்வராகத் தெரிவு செய்திருக்கின்றனர்.

அமெரிக்காவின் தீவிர இடதுசாரிகளிடையே மிகச் செல்வாக்கு மிக்க ஒர் அரசியல்வாதி மம்தானி.ஆயினும் அவர் ஒருநாள் நியூயோர்க் நகரத்தின் மேயராக வருவார் என்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

மம்தானியின் அதிரடியான வரவும், மம்தானியின் நியூயோர்க் அரசியல் பயணம் அமெரிக்கா தாண்டி முழு உலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளை மிகக் கடுமையாக விமர்சித்து வருகின்ற மம்தானியின் வெற்றி வெள்ளை மாளிகையை அதிரவைத்துள்ளது.

அதிபர் ட்ரம்ப் தேர்தலுக்கு முன்பாக நியூயோர்க் நகருக்கு இராணுவத்தை அனுப்பி அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தீவிரமாக முயன்றிருந்தார். மம்டானியைக் கடுமையாகத் தாக்கிப் பேசிவந்தார். நியூயோர்கில் ஒரு கம்யூனிஸ்ட் வெல்வதை அனுமதிக்கப் போவதில்லை, அவரைக் கைது செய்வேன் என்றும் வெளிப்படையாகச் சூளுரைத்திருந்தார். இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே வேட்பாளராகிய மம்டானி தேர்தலில் வெற்றிவாகை சூடியுள்ளார். இளம் வயதான மம்தானி அமெரிக்காவின் மிகப் பெரிய நகரமாகிய நியூயோர்க்கின் வரலாற்றில் வயதில் மிக இளைய மேயராகப் பதவியேற்கிறார். அத்துடன் முதலாவது முஸ்லிம் பூர்வீக மேயர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். தனது பல்கலைக்கழகக் கல்வியை பூர்த்திசெய்த பின்னர் 2018 இல்தான் அவர் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா மம்தானியின் வெற்றியை வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்.




**நியூயோர்க்கின் முதலாவது முஸ்லிம் மேயராக இந்திய வம்சாவளியினமம் தானி தெரிவாகிஉள்ளார். நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பதவியற்கும் மிகவும் வயதுகு றைந்தவராக இருக்கிறார். முன்பு மேயர் வேட்பாளராக ஜோஹ் ரான் மம்தானி இருந்த வேளையில் அவரின் முக்கிய பிரச்சாரங்களில் மோடி, நெத்தன்யாகுவை கைது செய்வேன் என்றும் தெரிவித்திருந்தார்.**

### மோடி ஒரு போர்க்குற்றவாளி:

நரேந்திர மோடி முதல் இஸ்ரேல் வரை, ஜோஹ்ரான் மம்தானி பலரை வெளிப்படையாக விமர்சனம் செய்துள்ளார். அவரது குடும்பத்தினர் குஜராத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். குஜராத்தின் முஸ்லிம்களைகொத்துக் கொத்தாகக் கொல்ல மோடி உதவினார். அங்கே அளவுக்கு அதிகமான வன்முறை நிலவியது.

தற்போது குஜராத்தில் இஸ்லாமியர்களே இல்லை என்பது போன்ற ஒரு தோற்றம் நிலவுகிறது.

நாம் பெஞ்சமின் நெதன்யாகுவை பார்ப்பதைப் போன்றே, மோடியையும் பார்க்க வேண்டும். அவர் ஒரு போர்க் குற்றவாளி, என்று மம்தானி முன்பு கூறியிருந்தார்.ஆனால் நியூயார்க்கில் இந்த விடயத்தில், சில இந்திய - அமெரிக்கர்கள், இந்துத்துவா குழுக்கள் அவரது கருத்தை வெறுப்பு கொண்ட, பிரிவினையை ஏற்படுத்தும் கருத்து என்று விமர்சித்தனர். மம்தானி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

### நெத்தின்யாகு வந்தால்கைது:

நியூயோர்க்குக்கு இஸ்ரேலிய பிரதமர் நெத்தின்யாகு வந்தால் கைது செய்வேன் எனவும் சூளுரைத்துள்ளார். அது மட்டுமல்ல இந்திய-பிரதமர் மோடியை! தனது நகரம் வரவேற்காது. குஜாராத்தில் இஸ்லாமியர்கள் படுகொலைக்கு மோடியே காரணம் எனவும் காரசாரமாக விமர்சித்துள்ளார்.

ஜோஹ்ரான் சியோனிசவாதிகள் மீது காட்டமான விமர்சனம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நியாயத்தை கதைத்தால் வாக்கு கிடையாது என்று ஒதுங்கும் அரசியல் தலைமைகள் தங்கள் ஒவ்வாமையை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டார்கள். அமெரிக்காவின் அதிகாரத்துவ கோட்டைக் குள்ளேயே சிறு புரட்சி நடக்கிறது என்றால் மிகையாகாது.

அத்துடன் பாலஸ்தீன விவகாரத்தில் ஜனநாயகக் கட்சியின் பெரும்பான்மை தலைவர்களிடம் இருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார் மம்தானி. அவர் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேலை தொடர்ந்து எதிர்த்தும்-விமர்சித்தும் வருகிறார்.

அமெரிக்க தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், இஸ்ரேல் ஒரு யூத நாடாக இருப்பதை அவர்எதிர்த்தார். “மதம் மற்றும் இதர கூறுகளின் அடிப்படையில் குடியுரிமை பிரிக்கப்படும் எந்த ஒருநாட்டையும் நான் ஆதரிக்க மாட்டேன். அனைத்து நாடுகளிலும் சமத்துவம் நிலவ வேண்டும். இதுதான் என்நம்பிக்கை,” என்று அவர் கூறியுள்ளார்.

பாலஸ்தீனர்களின் சர்ச்சைக்குரிய ‘க்ளோபலைஸ் தி இண்டிஃபாதா (Globalise the Intifada)” என்றமுழக்கத்தில் இருந்து அவர் விலகி நிற்கவில்லை. இண்டிஃபதா என்பது இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெற்ற பாலஸ்தீன போராட்டங் களைக் குறிப்பிடும் சொற்றொடர் ஆகும்.

இது தொடர்பாகப் பேசிய அவர் “இந்த முழக்கம் மனித உரிமைகளுக்கான பாலஸ்தீன மக்களுடைய போராட்டத்தின் அடையாளம்” என்றும் கூறியுள்ளார். “இது சமத்துவத்திற்கான குரல். வன்முளைறக்கான குரல்இல்லை” என்றும் அவர் கருதுகிறார்.

ஆனால் அவரது கருத்தை விமர்சிக்கும் பலரும், இந்த முழக்கம் சர்வதேச அளவிலான வன்முறைக்கு வழி வகுக்கிறது. இது யூத வாக்காளார்கள் மத்தியில் அச்சத்தைப் பரப்புகிறது என்று குறிப்பிடுகின்றனர்.

நியூயோர்க்கில் ஒரு புதிய சகாப்தம்:

நியூயோர்க் மாநில அரசியலில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது. முன்பு, சட்டமன்றத்தில் இடது சாரிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிகச் சிலரே இருந்தனர். ஆனால் இப்போது, அவர்களின் எண் ணிக்கை மற்றும் செல்வாக்கு இரண்டும் கணிசமாக வளர்ந்துள்ளன.மம்தானி போன்ற இளைஞர்கள் அரசின் உள்ளே இருந்துகொண்டே அதன் செயற்பாட்டு முறைமைகளை மாற்ற செயற்பட்டார்கள். மம்தானி ஒரு பாரம்பரிய அரசியல்வாதி அல்ல. ஒரு “வீட்டுவசதி ஆலோசகர்”

ஆக, நியூயோர்க்கின் சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் வீட்டுவசதிப் பிரச்சினைகளை நேரடியாகக் கையாண்டவர். அந்த அனுபவம்தான் அவரது அரசியல் போராட்டத்தின் அடிப்படையாகும்.

வாடகை கொடுப்பதில் ஏற்படும் தாமதத்தால் வெளியேற்றப்படும் அபாயத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு உதவியதால், அரசின் குறைபாடுகளை நேரில் கண்டவர் மம்தானி. “வாடகைக் கட்டுப்பாடு”, “வீட்டுவசதி நீதிமன்றம்” போன்ற சிக்கலான விடயங்க ளைப் பற்றிய நடைமுறை அறிவு அவருக்கு இருந்தது.

ட்ரம்பை மதிக்காத நியூயார்க் மக்கள் நியூயார்க் நகர மேயர் தேர்தலில் தன்னை கம்யூனிஸ்டாக அடையாளப் படுத்திக் கொண்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளரான மம்தானியை, அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்ததோடு வாக்காளர்களையும் எச்சரித்தார்.

நியூயார்க் நகர மேயர் தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட் பாளர் மம்தானி வெற்றி பெற்றால்,நியுயார்க் நகருக்கு மத்திய அரசின் நிதியை வழங்குவது சாத்தியமில்லை என அதிபர் குறிப்பிட்டுஇருந்தார். நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், அதிபராக எனக்கு நியூயார்க்கிற்கு நிறைய பணம்கொடுப்பது கடினமாக இருக்கும் , ஏனென்றால் உங்களிடம் ஒரு கம்யூ னிஸ்ட் நியூயார்க்கை நடத்தினால், அங்கு அனுப்பப்படும் பணம் வீணாக் குவதற்கு சமமானது என குறிப்பிட்டார். ஆனால், இந்த எச்சரிக்கைகள் எதையும் பொருட்படுத்தாமல் நியூயார்க் மக்கள் மம்தானிக்கு வாக்களித்து அடுத்த மேயராக்கியுள்ளனர்.


### ட்ரம்புக்கு பின்னடைவு:

இரண்டாவது முறையாக அதிபராக பொறுப்பேற்ற பிறகு, ட்ரம்ப் தன்னிச்சையாக பல அதிரடி முடிவுகளை வெளியிட்டு வருவது குடியரசு கட்சியிலேயே இரண்டாக உடைத்துள்ளது. அவரது பிற்போக்குத்த னமான முடிவுகளை ஒரு தரப்பினர் ஆதரிக்க, மற்றொரு தரப்பினர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியை சேர்ந்த வர்களும் இதே மனநிலையில் தான் உள்ளனர். இந்த சூழலில்மம்தானியின் வெற்றி ஜனநாயகக் கட்சியின் முற்போக்கான பிரிவுக்கு ஒரு முக்கிய உந்துகோலாக அமைந்துள்ளது.

தற்போது நியூயோர்க்கின் முதலாவது முஸ்லிம் மேயராக இந்திய வம்சாவளியின மம்தானி பதவி ஏற் றுள்ளார். நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பதவியற்கும் மிகம் வயது குறைந்தவராகப்பதிவு ஏற்கிறமை குறிப்பிடத்தக்கது. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தானந்த மற்றும் நளின் பிணை மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, நவ. 09

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோர், அந்தத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளதனால் பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்திருந்த பிணை மனுக்களை கொழும்பு நிரந்தர மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நிராகரித்துள்ளது.

பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் பி.எம்.டி. பண்டார ஆகியோரைக் கொண்ட மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தீர்ப்பைப் பிரகடனம் செய்த நீதிபதிகள் குழாம் குறிப்பிட்டதாவது:

நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஒரு பிரதிவாதி, மேன்முறையீட்டின் கீழ் பிணை கோரும்போது, விசேடமான காரணங்களை முன்வைப்பது அத்தியாவசியமானது.

ஆனால், இந்த இரண்டு பிரதிவாதிகளும் முன்வைத்த காரணங்கள் பிணை வழங்குவதற்குப் போதுமான விசேடமான காரணங்கள் அல்ல என்பதால் அவர்களது பிணை மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன என்று நீதிபதிகள் குழாம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் அலுவலகங்களுக்கு விநியோகிப்பதற்காக சதொச நிறுவனம் ஊடாக 14,000 கரம் பலகைகளையும் 11,000 தாம் பலகைகளையும் இறக்குமதி செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 53 மில்லியன் ரூபாய் வரையான நஷ்டத்தை ஏற்படுத்தியதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழு வால் கொழும்பு நிரந்தர மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

நீண்ட விசாரணையின் பின்னர், அந்தக் குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட மஹிந்தானந்த அளுத்கமகேக்கு 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் குறித்த நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது.

விதிக்கப்பட்ட தண்டனைகளுக்கு எதிராகப் பிரதிவாதிகள் தமது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மேன்முறையீடுகள் விசாரிக்கப்பட்டு இறுதித் தீர்ப்பு வெளியாகும் வரை தம்மைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகிய இரு பிரதிவாதிகளும் தமது சட்டத்தரணிகள் ஊடாகவே இந்த பிணை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.(எ)

# மின்சார சபை மறுசீரமைக்கப்படும்

கொழும்பு, நவ. 09

வலுசக்தி துறையை வினைத்திறனாக்கும் வகையில் இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட போது ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

வலுசக்தி துறையை வினைத்திறனாக்கும் வகையில் "வலுசக்தி பரிவர்த்தனை" சட்டமூலம் அடுத்தாண்டு கொண்டுவரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ)

# சனசமூக நிலையங்களுக்கு காசோலை வழங்கி வைப்பு



வவுனியா, நவ. 09

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கீழ் உள்ள சனசமூக நிலையங்களுக்கு நேற்று முன்தினம் காசோலை வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் பா. பாலேந்திரனால் 36 சனசமூக நிலையங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

இதில், பிரதேச சபை செயலாளர் மற்றும் சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

## புதிய அரசியல்...

10ஆம் பக்கத் தொடர்ச்சி...

காணாமலாக்கப்பட்டோர் விடயத்துடன் தொடர்புடைய சில இராணுவ பிரதானிகளை நாம் பணி நீக்கம் செய்துள்ளோம். கடற்படையின் முன்னாள் தளபதியை கைது செய்துள்ளோம். அந்த வகையில் எங்கள் அரசு பதவியைப் பொருட்படுத்தாமல் நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் வெறும் வாய்வழி குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியாது. நாங்கள் விசாரணை முடிவுகளின் அடிப்படையில் மட்டுமே செயலில் ரூடவ்டுபடுகிறோம். அவர்கள் எந்த நிலைமையிலிருந்தாலும் நாம் ஏற்கனவே ஒரு எடுத்துக்காட்டை அமைத்துள்ளோம். பொலிஸ்மா அதிபராக அதிபராக ,ருந்தாலும்கூட அவர் தவறு செய்திருந்தால் அவரை நீக்குவோம். அவர்கள் எங்கு இருந்தாலும் அதில் எங்களுக்கு வேறுபாடு ,ல்லை. அவர்கள் தவறு செய்திருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். எனவே இந்த விவகாரத்தில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதில் சம்பந்தப்பட்டவர்கள் எங்கு இருந்தாலும் அதில் மாற்றமில்லை. சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதன் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவோம்.

**கேள்வி: தமிழ் மக்களின் பிரசினைக்கான தீர்வை இந்த அரசாங்கம் வழங்கும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கலாமா?**

**பதில்:** மிகுந்த நம்பிக்கையுடன் சொல்லலாம் . நாங்கள் இந்த அரசாங்கத்தை வலுவான தீர்மானத்துடன் உருவாக்கினோம். நாங்கள் நாட்டை மாற்ற விரும்புகிறோம். பொருளாதாரத்தைச் சரிசெய்ய விரும்புகிறோம். பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்யவும்,பொருளாதார பலன்கள் அனைவருக்கும் சமமாக கிடைக்கவும் விரும்புகிறோம். நம் நாடு கடந்த 40, 50, 60 கூட 100 ஆண்டுகளாகவே துன்பங்களை அனுபவித்து வருகிறது. அந்த தேசிய பிளவை மாற்றி தேசிய ஒற்றுமையை உருவாக்க விரும்புகிறோம். இந்த தேசிய ஒற்றுமை வெறும் பேச்சால் உருவாகாது. அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் வகையில் 'தேசாபிமான' விழாவில் நாங்கள் மூன்று முக்கியக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். சிங்களர்களுக்குச் சிங்களப் பண்டிகைகள் உள்ளன. தமிழர்களுக்குத் தமிழ் பண்டிகைகள் உள்ளன. ஆனால் நாங்கள் நாடு முழுவதும் மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் ஒரு பண்டிகையை உருவாக்க விரும்புகிறோம். அதை நாங்கள் ஏற்கனவே அமைச்சரவை ஊடாக சமர்ப்பித்துள்ளோம். நான் நம்புகிறேன் எங்களால் தேசிய ஒற்றுமையை உருவாக்க முடியும்.

நாங்கள் ,ந்த நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் இந்த நாட்டின் மக்கள் ஒன்றுபட்டு நீதி மற்றும் அழகுடன் வாழக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றோம். நாங்கள் எங்களால் முடிந்த அளவு அதனை செய்து முடிப்போம். அதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படுகிறோம். இதே நம்பிக்கையோடு இதைச் சொல்கிறோம். அதன் ஊடாக நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமான நாடு அழகான வாழ்க்கையை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

## முன்னாள்...

12ஆம் பக்கத் தொடர்ச்சி...

இறுக்கமான நடைமுறைகள் சிலவற்றைத் தளர்த்தி வருகிறது என்பதை கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னரான அதன் அணுகுமுறைகள் வெளிப்படுத்தியிருந்தன. கொள்கை களைப் பரப்புரை செய்து மக்கள் ஆதர வைப் பெறுவதிலுள்ள இடர்ப்பாடுகள் காரணமாக தேர்தல்

வேற்றிகள்ரூபவ்பதவிகள் என்பவற் றின் மூலம் கட்சியைப் பலப்படுத்தி மக்கள் மத்தியில் தமது கொள்கைகளைக் கொண்டு செல்லும் உத்தியை அது கையாள விரும்புகிறதா என்ற ஐயம் இதன்மூலம் எழுகிறது.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்து அதன் தற்போதைய செயலாளர் சுமந்திரன்

தனது கட்சி ஒப்புதலளித்தால் வடக்கு மாகாண சபைக்கான முதல மைச்சர் வேட்பாளராகக் களமிறங்கத்

தயாரென ஏலவே வெளிப்படுத் திவிட்டார். அவர் அவ்வாறு களத்தில் இறங்குவதற்கு உண்மையில்

முடிவெடுத்து விட்டால் கட்சி ஒப்பு தல் என்பது வெறும் பாசாங்குதான். ஏனெனில் அக்கட்சியின் தற்போதைய நிர்வாகத்தைப் பொறுத்து சுமந்திரனின்

முடிவே கட்சியின் முடிவென்பது தெரிந்த விடயம். என்பது கேள்விக்குறியே.

ஆதரவாளர்கள் தன்னை விட்டு கழன்று விடுவதைத் தவிர்ப்பதற் காகவே அவ்வாறான அறிவிப்பொன்றை அவர்வெளியிட்டிருந்தார் என்று கருத இடமுண்டு. அதனால் நிச்சயமான ஒரு வெற்றி கிடைக்கும்

சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே அவர் களமிறங்குவார் என்பது திண்ணம்.

இந்நோக்கத்துக்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரித்துவிட்ட கட்சிகளை மீண்டும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு சுமந்திரன் அழைப்பு விடுப்பதையும் காணமுடிகிறது.

அக்கட்சிகளும் அவ்வாறான இணைப்பே தமக்கு நன்மையானது எனக் கருதுகின்றன.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கொள்கை அடிப்படையில் எல்லாக்கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்

என்று மக்கள் குரலெழுப்பி வரும்போது அதற்குச் செவிசாய்க்காது ,ருக்கும் அரசியல் தலைவர்கள் தேர்தல் ஒன்று வரும்போது மட்டும் ஒன்றுபடுவதற்கு முண்டியடிப்பது வேதனைக்குரியது.

இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக் அக்கட்சியின் அல்லது மீண்டும் இணையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக இளஞ்செழியன் களமிறக்கப்படுவதற்கான வாய்ப்புகளையும் நிராகரிக்க முடியாது. இது தொடர்பாக அண்மையில் ஊடகங்களுக்கு இலங்கைத்

தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் சி.வி. கே. சிவஞானம் தெரிவித்த மயக்கமான கருத்து

இவ்வாறு கருதுவதற்கு இடமளிக்கிறது. அவர் அங்கு கூறும்போது வெளியில் இருந்து முதலமைச்சரை

இறக்குமதி செய்யமாட்டோம். எனினும் எங்கள் கட்சி உறுப்பினர்தான் கட்சி என்றும்

எடுக்கமாட்டோம். கட்சிக்கு வெளியில் இருந்து உழைத்தவர்கள்ரூபவ் ஆதரவளித்தவர்கள் அதாவது கட்சியுடன் ஏதோவொரு வகையில் தொடர்புடையவர்கள்தான் எமது கட்சியின் வேட்பாளராக இருப்பார் எனக் குறிப்பிட்டுள்ளார். ஏலவே சுமந்திரன் தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கும் ஒரு நிலையில் கட்சித் தலைவரின் இந்த அறிவிப்பு பல ஐயங்களுக்கும் எதிர்வுகூறல்களுக்கும் வாய்ப்பளிக்கிறது. அத்துடன் லண்டனில் நடந்த முன்னாள் நீதிபதியின் கௌரவிப்பு

நிகழ்வில் சுமந்திரனின் தீவிர விசுவாசியான வித்தியாதரனும் அழைக்கப்பட்டிருந்தமையும் இங்கு கவனிக்கத்தக்கவொன்று.

எது எவ்வாறு இருப்பினும் இளஞ்செழியன் அவர்கள் தேர்தல் அரசியல் சேற்றில் கால்வைக்கக்

கூடாது என்பதே அரசியல் சார்பற்றவர்களதும்ரூபவ் அவரை நேசிப்பவர்களதும் பொதுக்கருத்தாகக்

காணப்படுகிறது. முதலமைச்சர் பதவிக்கு அவர் பொருத்தமானவரா இல்லையா என்பதற்கப்பால்

இன்றைய தமிழ் அரசியல் சூழ்நிலையில் அவர் அதில் கால்வைத்தால் மக்கள் மத்தியில் அவர் ரூடவ்ட்டி வைத்திருக்கும் பெருமதிப்புக்கு பங்கமேற்படும் என்பதை உறுதியாகக் கூறமுடியும். இதனைக் கருத்திற் கொண்டே முன்னாள் நீதிபதி ,ளஞ்செழியன் அவர்களை இந்த அரசியலுக்குள் வலிந்திழுத்து அவருக்கு ,ன்னொரு அநீதியை ஏற்படுத்தவேண்டாம் என்று மூத்த பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் கேட்டுள்ளமை அனைவரின் கவனத்துக்குரிய பெறுமதியான்வேண்டு கோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்...

என்று ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

கார்த்திகை மாதம் என்பது தேச விடுதலைக்காக தமது இன் உயிர்களை ஆகுதியாக்கியவர்களை நினைவு கூறுகின்ற மாதம்.

அந்தவகையில் கார்த்திகை 21 தொடங்கம் 27 ஆம் திகதிவரை மாவீரர் வாரமாக தாயகத்திலும் புலம் பெயர்ந்த தேசமெங்கிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வருட மாவீரர் நினைவேந்தல் சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. புலம்பெயர் தேசங்களிலும் அந்தந்த நாடுகளிலும் மாவீரர் நினைவேந்தல் இடம் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தாயகத்திலே ஒரு சில மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் அகன்றிருக்கின்றனர். கணிசமான மாவீரர் துயிலுமில்லங்களில் இராணுவ முகாம்கள் உள்ளன.

இதனால் ஒவ்வொரு வருடமும் தமது பிள்ளைகளுக்கு சுதந்திரமாக நினைவேந்தல் செய்வதற்கு மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அந்தவகையிலே இந்த வருடமும் மாவீரர் வாரத்தை சிறப்பாக அனுஸ்டிப்பதற்கு எஞ்சியிருக்கின்ற மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி ஒரு தேசிய நல்லிணக்கத்தோடு, விட்டுக்கொடுப்போடு இந்த வருடமும் மாவீரர்களை நினைவேந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.-என்றார். (அ)

## இந்தியாவின்...

குறிவைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இதற்காக அந்த அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் பழைய வலையமைப்பை நாடிச் சென்றுள்ளது.

இந்தக் கூட்டணியில், டி-சிண்டிகேட் தமது பண பலத்தையும் சர்வதேச அணுகலையும் வழங்குகிறது. பதிலுக்கு, விடுதலைப் புலிகளின் எஞ்சிய குழுக்கள் பாக்கு நீரிணை உள்ளிட்ட கடலோரப் பகுதிகள் குறித்த ஆழமான உள்ளூர் அறிவு மற்றும் தளபாட ஆதரவை வழங்குகின்றன.

தலைமை மற்றும் நிதி இல்லாமல் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளின முன்னாள் உறுப்பினர்களுக்கு இந்த நிதி உதவி ஒரு உயிர்நாடியாக அமைகிறது என இந்திய புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிதியைக் கொண்டு அவர்கள் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது மற்றும் ஆயுதங்கள் வாங்குவது போன்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்று அஞ்சப்படுகிறது.

இப்ராஹிம் தாவூத்தின் மூலதனமும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தளவாடத் திறனும் இணைவது தென்னிந்திய போதைப்பொருள் சந்தையில் ஒரு பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு அபாயகரமான இணைவாகும் என இந்தியப் பாதுகாப்பு அமைப்புகள் கருதுகின்றன.

ஏனென்றால், இது வெறுமனே பயங்கரவாதத்தை மட்டும் அச்சுறுத்தாமல், போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பயங்கரவாதச் செயல்பாடுகள் அனைத்தையும் ஆதரிக்கும் ஒரு குற்றவியல் உள்கட்டமைப்பை உருவாக்கக்கூடும்.

இந்தநிலையில், இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு மற்றும் பிற உளவுப் பிரிவுகள் இந்தக் கூட்டணியின் நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் தகவல் தொடர்புகளைத் தீவிரமாகக் கண்காணிப்பதுடன், தமிழ்நாடு, கேரளா மற்றும் லட்சத்தீவுகளைச் சுற்றி கடலோர கண்காணிப்புகளை தீவிரப்படுத்தியுள்ள இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## எல்லை...

மாகாண சபைகளுடன் நாங்கள் இணைந்து செயல்படப்போகிறோம். எங்கள் நாட்டின் அரசியலமைப்பை திருத்தும் நோக்கம் எங்களிடம் உள்ளது. அந்த நேரத்தில், மாகாண சபைகள் அல்ல. மாறாக உண்மையான தேசிய ஒற்றுமையை உருவாக்கக்கூடிய தமிழர், முஸ்லிம்கள் மற்றும் பிற புத்திஜீவிகள் இணைந்து ஒரு புதிய முன்மொழிவை கொண்டு வரவேண்டும்.

அந்த புதிய முன்மொழிவு (திருத்தங்கள்) உருவாகும் வரை, மாகாண சபைகளில் கை வைக்கமாட்டோம். மாகாண சபைகள் வெற்றியடையவில்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் அதற்கு மாற்றாகச் சிறந்த ஒன்று கொண்டு வரப்படும் வரை இது தொடரும்.

அரசியலமைப்பின்படி மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். இந்த ஆண்டு அது நடத்தப்படவில்லை. ஏன் என்றால் பல தேர்தல்களை கடந்து வந்துள்ளோம்.

எல்லைகளை நிர்ணயிப்பதற்காக முந்தைய அரசு அதற்கென ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்தது-எல்லை நிர்ணயப் பணிகளை மேற்கொண்டது. அதில் பல குறைகள் இருந்தன. அது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் செய்யப்பட்டது. அது பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

அதை சமர்ப்பித்த நபரும் அதற்காக வாக்களித்தார், அது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதன்பின் சட்டப்படி ஒரு பிரச்னை ஏற்பட்டது. அது நிறைவேற்றப்பட்ட பிறகு, அது சபாநாயகரிடம் சென்று மற்றொரு குழுவால் அங்கீகரிக்கப்படவேண்டும் அல்லது புதிய குழு நியமிக்கப்படவேண்டும். ஆனால் இவற்றில் எதுவும் பாராளுமன்றத்தால் செய்யப்படவில்லை.

அதனால் இப்போது அந்தச் சட்டம் சிக்கலில் சிக்கியுள்ளது. செயல்முறை நிறுத்தப்பட்டுள்ளது, மேலும் அடுத்த படிகளுக்கு செல்லும்போது அது முடங்குகிறது.

இப்போது நாம் சட்டமா அதிபரிடம் என்ன செய்யவேண்டும் என்று கேட்கவேண்டியிருக்கிறது. எப்படியாயினும், புதிய எல்லை நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, அது கொண்டு வரப்பட்டு, மக்களின் அங்கீகாரம் பெறப்பட்ட பிறகு தேர்தலை நடத்தவேண்டும்.

அப்படி செய்தால் எந்தத் தடைகளும் இருக்காது. நாம் அது முடிந்தவுடன் தேர்தலை நடத்த முடியும்-என்றார். (அ)

(முழுமையான செவ்வி 10ஆம் பக்கத்தில்)

## பட்ஜெட்...

தெரிவிக்கையில்-

நான் அவதானித் தேன். எதிர்க்கட்சித் தலைவர் நேற்று ஊடகங் களிடம் சென்று இது மக்களுக்கு நிவாரணம் வழங்காத வரவு-செலவு திட்டம் என்கிறார். நான் நினைக்கிறேன் அர்ஜுனா மாத்திரமே உறங்கிக்கொண்டிருந்தார் என்று. ஆனால் எதிர்க்கட்சித் தலைவரும் உறங்கிக் கொண்டுதான் இருந்துள்ளார். அல்லது உறங்குவது போல நடித்தாரா? கடந்த வருடத்தில் மாத்திரம் நாங்கள் எவ்வளவு நிவாரணங்களை மக்களுக்கு வழங்கி இருக்கிறோம்-என்றார். (அ)

## பொருளாதார...

முதலீடுகளுக்குள் நுழைய தனியார் துறைக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2026 வரவு-செலவுத் திட்டம் குறித்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் இரவு கொழும்பில் நடைபெற்றது.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உட்படப் பல வர்த்தகத் துறைப் பிரமுகர்களின் பங்குபற்றுதலுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வர்த்தக சபைத் தலைவர் கிரிஷான் பாலேந்திரா கருத்து தெரிவிக்கையில்-

பல ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் குறைந்த பணவீக்கம் மற்றும் நீண்ட காலமாக நிலைத்திருக்கும் குறைந்த வட்டி வீதங்கள் ஆகியவற்றைக் காண்கிறோம். காலப்போக்கில் தனியார் துறையில் அதிகரித்து வரும் இந்த நம்பிக்கை நாட்டிற்கு ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டுவரும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ள மிக முக்கியமான காரணி, நாம் பொருளாதார ஒழுக்கத்தைப் பேணுவதுதான். இந்த ஒழுக்கம் தனியார் வணிகங்கள் செயல்படும் அல்லது வெற்றி பெறும் விதத்தில் பெரிதும் தாக்கம் செலுத்தும்-என்றார். (அ)

## ஏமாற்று...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறுகிய காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை. உறுதிமொழிகள் இடம்பெற்றிருந்தாலும் அவற்றை நிறைவேற்றுவதற்குரிய வழிகாட்டல் இல்லை. இலக்கங்களை குறிப்பிடலாம், அதனை அடைவதற்குரிய வேலைத் திட்டமும் பாதீட்டில் இல்லை. ஆக மொதத்தத்தில் எவ்வித அடிப்படையும் இன்றி மக்களை ஏமாற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டமே இதுவாகும்-என்றார். (அ)

## வடமாகாண...

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2009 இற்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை இவ்வாறு இருக்கவில்லை. ஆனால் அதற்கு பிற்பாடு திட்டமிட்டு பரப்பப்பட்டுள்ளது. கடந்தகால அரசாங்கங்கள் இதனை செய்துள்ளன. எமது அரசாங்கம் வடக்கில் அதனை கட்டுப்படுத்தி இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் சட்டவிரோத நிதியீட்டங்கள், மறைக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது-என்றார். (அ)

## மதுபான...

பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற சிறப்புரிமையை மீறியதாக தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கருத்து தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டு பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு அவர் நேற்று உரையாற்றினார். முன்னதாக, பாராளுமன்ற சிறப்புரிமையை சிறீதரன் மீறியதாக குறிப்பிட்டு சாமர சம்பத் தசநாயக்கவினால் பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இது குறித்து தமது நிலைப்பாட்டை பாராளுமன்றில் சிறீதரன் நேற்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது நலன் மற்றும் மக்கள் நலனில் கவனம் எடுத்து எனது முடிவுகளை மிகத் தெளிவாக அரசியலமைப்பு சபையில் முன்வைத்துள்ளேன்.

எனது கட்சிக்காகவோ, தனிநபர்களின் அழுத்தத்துக்காகவோ எனது முடிவுகளை நான் மாற்றிக்கொள்ளவில்லை.

எந்தவித வெளிப்புற அழுத்தமும் என் மீது பிரயோகிக்கப்படவில்லை, பிரயோகிக்கவும் முடியாது என்பதைக் கடந்த ஓராண்டு காலமாக நேர்மையுடனும், கண்ணியத்துடனும் நிரூபித்துள்ளேன்.

சிவில் புத்தி பெரமுன எனப்படும் அமைப்பைச் சேர்ந்த ஒருவரால் நிதி குற்றப்புலனாய்வுப் பிரிவில் நான் சொத்துக்கள் குவித்து வைத்திருப்பதாக கடந்த ஜூலை மாதம் முறைப்பாடு செய்யப்பட்டதாக நாளிதழ்களிலும், சமூக ஊடகங்களிலும் பார்வையிட்டு இருந்தேன்.

குறித்த செய்திக்குப் பின்னர் வெளிப்படையான விசாரணைகளை செய்து உண்மையை வெளிப்படுத்துமாறு கூறியிருந்தேன்.

இன்று 3 மாதங்கள் ஆகியும் நிதி குற்றப்புலனாய்வுப் பிரிவால் எந்த முடிவுகளும் வெளியிடப்படவில்லை.

எனது பெயரிலோ, எனது குடும்ப உறுப்பினர்களது பெயரிலோ சொத்துக்கள் இருந்தால் விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பகிரங்கமாகக் கேட்கிறேன். எனது பெயரிலோ, எனது சிபாரிசிலோ கடந்த காலங்களில் மதுபானச்சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் ஏதும் பெற்றிருந்தால் உடன் வெளிப்படுத்தி என் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன்.

ஊவா மாகாணத்தின் முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க பணியாற்றியபோது அவர் ஒரு தமிழ் பெண் அதிபரை முழங்காலில் இருத்தி வைத்து விசாரித்த ஒரு மனநோயாளி.-என்றார். (அ)

## நுகேகொடை...

பல காரணிகளைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்தப் பேரணியில் பங்கேற்கப்போவதில்லை என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொட்டாஞ்சேனை...

கண்காணிப்பு கமெரா காணொளி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் கார் யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதன்போது காரில் இருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

20, 19,21 வயதுடைய மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். ஆரம்ப கட்ட விசாரணையில் தாங்கள் யாழ்ப்பா ணத்துக்கு சுற்றுலா வந்ததாக சந்தேக நபர்கள் தெரிவித் தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவரையும் கொழும்பில் இருந்து சிறப்பு பொலிஸ் விசாரணை குழுவினரிடம் ஒப்படைக்க யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# போதைப்பொருள் விற்றுச் சேர்த்த பணத்தை யாழில் வட்டிக்கு வழங்கிவரும் மாபியாக்கள்!

## ரஜீவன் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் மாபியாக்கள், போதைப் பொருட்களை விற்று வரும் பணத்தினை வட்டிக்கு வழங்கி, வட்டி பணத்தை வசூலிக்க பல வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-


போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை ஜனாதிபதி முன்னெடுத்திருப்பது தொடர்பில் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ள துடன் நம்பிக்கை கொண்டுள்ள னர்.

அந்நிலையில் கடந்த வாரம் திருநெல்வேலி மற்றும் கொக்கு வில் சந்தைப் பகுதிகளில் போதைப் பொருள் மாபியாக்களின் அட்ட காசம் அதிகரித்துள்ளது. சந்தைக்கு வருவோரை துன்புறுத்தியுள்ளனர்.

போதைப்பொருள் மாபி யாக்கள் போதைப்பொருட்களை விற்று வரும் பணத்தை வட்டிக்கு வழங்கி, வட்டி பணத்தை வசூலிப் பதற்கான பல்வேறு குற்றச்செயல் களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (அ)

# ஜே.வி.பி. செயலருடன் சுவிஸ் தூதுவர் சந்திப்பு!



கொழும்பு, நவ. 09

ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வாவை இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் சந்தித்துப் பேசியுள்ளார்.

பத்தரமுல்லை,பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இலங்கை பாராளுமன்றக் குழுவொன்று சுவிற்சர்லாந்துக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பா கவும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட் டுள்ளது.

இந்தச் சந்திப்பில் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரக முதல்நிலைச் செயலர் ஜஸ்டின் பொய்லெட்டும் கலந்து கொண்டுள்ளார். (அ)

# அகதிமுகாமில் உள்ள மனைவியை பார்க்க இராமேஸ்வரம் சென்றவர் புழல் சிறையில்!

சென்னை, நவ. 09

இராமேஸ்வரம் மண்டபம் முகாமில் உள்ள தனது மனை வியை பார்ப்பதற்காக சட்டவிரோ தமான முறையில் படகில் இரா மேஸ்வரம் சென்ற யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த இளைஞனை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறை பகுதியை சேர்ந்த கண்ணன் (வயது 34) எனும் இளைஞனே கைது செய்யப் பட்டு தற்போது புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞ னிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது-

குறித்த இளைஞனின் மனைவி மண்டபம் முகாமில் தங்கியுள்ளார். அவரை பார்ப்பதற்காக கடந்த 06ஆம் திகதி வல்வெட்டித்துறை பகுதியில் இருந்து படகில் வேதார ண்யம் பகுதிக்கு சென்று இறங்கி யுள்ளார். அங்கிருந்து பஸ்ஸில் இராமேஸ்வரம் வந்து மண்டபம் அகதி முகாமில் உள்ள மனைவியை பார்வையிடுவதற்காக இராமேஸ் வரம் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள பூங்காவில் தங்கியிருந்த வேளையே கைது செய்யப்பட் டார்.

கைது செய்யப்பட்ட இளை ஞனிடம் இருந்து , இலங்கை பணம் , இலங்கை கடவுச் சீட்டு, அடையாள அட்டை என்ப வற்றை பொலிஸார் மீட்டிருந்தனர்.

விசாரணைகளின் பின்னர் நாட்டுக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைந்தார் என வழக்கு பதிவு செய்து , நீதிமன்றில் முற்ப டுத்தியதை அடுத்து எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டதை அடுத்து புழல் சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார். (அ)

# நிதி முகாமைத்துவத்தில் நாடு முன்னேற்றமில்லை

## பாராளுமன்ற ஆய்வாளர் முரளிதாஸ்

கொழும்பு, நவ. 09

நிதி முகாமைத்துவத்தில் இலங்கை முன்னேற்றம் அடையவில்லை என பாராளுமன்ற ஆய்வாளர் விஸ்வலிங்கம் முரளிதாஸ் தெரிவித்தார்.

நிதி முகாமைத்துவத்தைப் பேண வரவுக்கு ஏற்ப செலவு செய்யவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

நல்லதொரு பாதிடானது வருமானத்துக்கும் செலவுக்குமான இடைவெளியை குறைக்கக்கூடியதாக இருக்கவேண்டும் என அவர் கூறினார்.

இதன் மூலம் கடன் பெற வேண்டிய அளவை குறைத் துக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதீட்டு பற்றாக்குறை நாட்டுக்குச் சுமையாகக் காணப்படும் எனவும் முரளிதாஸ் குறிப்பிட்டார். (அ)

# அநுர அரசின் போதை ஒழிப்பு காலத்துக்கு ஏற்ற நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் பாராட்டு

யாழ்ப்பாணம், நவ. 09

சமூகத்தை உலுக்குகின்ற - பிறழ்வுக்கு காரணமான உயிர் கொல்லி போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தியின் மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தலைமையிலான அரசாங கம் ஆரம்பித்திருக்கின்றது. இன்றைய பிள்ளைகளின் எதிர் காலத்தை பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கம் எடுத்துள்ள நட வடிக்கை காலத்துக்கேற்ற ஒன்றா கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கரணவாய் தாமோதர வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலையின் அதிபர் ஆனந்த ராசா விமலராசா தலைமையில் பாடசாலையில் நேற்று சனிக் கிழமை மாலை நடைபெற்றது. விருந்தினர்கள் பாண்ட் அணிவகுப் புடன் வரவேற்கப்பட்டு திருவு ருவச் சிலைகளுக்கான மலர்மாலை அணிவிக்கப்பட்ட பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் மேலும் தெரிவித்ததாவது-

நாளைய சமூகத்திலும் அரசியல், நிர்வாக, கல்வி மற்றும் பிற துறைகளிலும் முக்கியப் பொறுப்புகளை ஏற்கப் போவது நீங்கள் தான். ஆனால் இன்று பல இடங்களில் தலைமைத்துவ குறைபாடு காரணமாக மக்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் சவால்களை எதிர்கொள்கின்றன.




செய்யத்தக்க ஒன்றைச் செய்யாமல் காரணம் கூறுவோர் அதிகம். நேர்மையான சிந்தனை, பிறருக்கு உதவுதல், பொறுப்பு உணர்வு போன்ற பண்புகள் பல இடங்களில் குறைவாகத் தெரிவதைக் காண்கிறோம். ஆகையால், கல்வியில் முன்னேறு வதோடு சேர்த்து உயர்ந்த மனிதப்பண்புகள் வளர்த்துக்கொள் வது அவசியம். அப்போதுதான் நீங்கள் சமூகத்தில் மரியாதைக் குரியவர்களாக திகழ்வீர்கள்.

உங்களின் வளமான எதிர்காலத் துக்காக எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளரும், நிறுவுநர் குடும்ப உறுப்பினருமான சி.வசீகரன் கலந்துகொண்டார். அத்துடன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் நிகழ்வில் பங்கேற்றார். (அ)

# அத்துரலிய ரத்ன தேரரின் கட்சி அரசாங்கத்துக்கு பச்சைக்கொடி

கொழும்பு, நவ. 09

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் அங்கம் வகிக்கும் அபே ஜனபல கட்சி தற் போதைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித் துள்ளதாக, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தக வீரக்கோன் அறிவித்துள்ளார்.

அந்தக் கட்சியின் உயர்பீடம், தேசிய மக்கள் சக்தி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்குத் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானித்துள் ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்க ளில் தமது கட்சியின் ஆதரவை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்காக முன்னெடுக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவ தற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் அபே ஜனபல கட்சி எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பெரும்பாலான தேசிய பணிகளை அபே ஜனபல கட்சி பாராட்டியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org